# மில்க்வைற் செய்தி

## Milk White News



★ மில்க்வைற் மீனாட்சிப்பிள்ளை சிறப்பிதழ் ★

# மில்க்வைற் செய்தி

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி குலரத்தினம் ★ மாசி 1986 ★ இதழ் 122

# தை பிறந்தது! வழி பிறக்கவில்லை?

தைபிறந்தால் வழிபிறக்கும் என்று நம்பியிருந்தோம். தைபிறந்தது ஆனால் வழிபிறக்கவில்லை. பிறவாமல் போவதும் இல்லை. வழிபிறக்கத்தான் போகிறது. அவசரப்படாமல், முன்னம் பொறுத்த அளவில் இன்னும் பொறுத்திருந்து பார்ப்போம். பொறுத்தார் பெறும் பேறு நாமும் பெறுவோம் தானே. வாய்ச்சொல்லில் வல்லவர்கள் வாயில் வந்தபடி சொல்லுவதைக் கேட்டு நாம் மனம் வருந்தக்கூடாது. புண்ணியம் பாபம் இரண்டும் நமது செயல்கள். நாம் செய்தவை யாவும் குவியலாகக் குவிந்து கிடக்கின்றன. அவற்றை நாமே அனுபவித்துத் தீரவேண்டும். அழுதழுதும் அவளே பிள்ளையைப் பெறுதல் வேண்டும். பிள்ளை சுகசீவியாய், தீர்க்காயுளுடன் பிறக்கப்போகிறது. அதிலே சந்தேகம் இல்லை.

வினைகளாய புண்ணிய பாபங்களுள் நாம் அனுபவிப்பதற்கு நமக்கு முதலிலேவரும் நிகழ்ச்சி பாலனுபவிப்பு. பால் புண்ணியம். அதிலே கலந்துள்ள, செறிந்துள்ள நீர் பாபம். பால் சூடாகும் போது, முதலிலே கொதித்து ஆவியாகி வெளியேறுவது நீர். அதன் பின்னரே பால் சூடு பெறுகிறது. இவ்வண்ணம் நாம் பாவங்களை அனுபவித்துத் தீர்த்துக்கொள்வோம். பின்னர் புண்ணியத்தை அனுபவிப்போம்.

கடவுளில் நம்பிக்கை கொண்டுள்ள நாம் கடவுளை நோதல் ஆகாது. கடவுள் பலயீனன் எனக் கருதுதல் ஆகாது ஈசன் பலயீனன் என்றால் படைத்தல், காத்தல், அழித்தல் செய்பவர் எங்கள் இறைவன் தானே.


பெரிய முனிவர் வசிட்டர் பெரிய மந்திரி சுமந்திரன் முதலானோர் இராமபிரானுக்கு முடிசூட்டுவதற்கு நாள் நிச்சயம் செய்தவர்கள். அந்த முகூர்த்தம் பதினான்கு ஆண்டுகள் தாமதித்தே வந்து வாய்த்தது.

தேவர்களே, அவுணர் தலைவனாய மாட்சிமைதங்கிய சூரபதுமனிடம் படாதபாடு பட்டனர். அவர்கள் வினைவசத்தால் பாடுபட்டனர் என்பது பொய்யாகாது. இறைவன் அவர்களை வருத்தவில்லை. வினை வருத்தியது.

“இவறலும் இகலும் இன்றி
யார்க்கும் ஓர்பெற்றித்தாகி
அவரவர் வினைகள் நாடி
அதற்படு பொருளை நல்கும்
சிவனை யாம் வெறுத்தல் குற்றம்
சிறந்தநோன் பியற்றிடாதே
தவறுசெய் தனம்என் றெம்மை
நோவதே தக்கதென்றார்.”

இப்படிச் சொன்னவர் பிரமதேவர். இவ்வண்ணம் சீதாபிராட்டியாரும் செய்வினையையும், வினைப்பயனையும் பற்றிக் கூறியுள்ளாள். துன்பம் வினையினால் விளைகிறது. துன்பங்களுக்குக் காரணம் வினைகள் தாம் என்பதைத் தெளிதல் வேண்டும்.

“யானிழைத்த வினையினால் இவ்விடர்
தானடுத்தது தாயினும் அன்பினோய்
கூனியில் கொடியா ரலரேயிவர்
போனகாரியம் எண்ணலை புந்தியோய்.”



இராமநாதன் கல்லூரி வளவில் மரம்நாட்டும் வைபவத்தில் தொழிலதிபர் திரு. கனகராசா அவர்களை கல்வியதிகாரி திரு. தனஞ்சயன் வரவேற்றுப் பேசினார்.

★ கடவுள் காப்பாற்றுவார் நாம் கவலைப்படத் தேவையில்லை ★

உ
சிவமயம்

# மில்க்வைற் செய்தி

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின்
மாதாந்த செந்தமிழ் ஆங்கில ஏடு

**Milk White News**

மாசி 1986 இதழ் 122

## மில்க்வைற் மீனாட்சிப்பிள்ளை நினைவுச் சிறப்பிதழ்



## விநாயக தத்துவம்

விநாயகப் பெருமானின் திருமுகம் திருமாலையும், முக்கண் சிவபெருமானையும், நாபி நான்முகனையும், இடப் பாகம் சக்தியையும், வலப்பாகம் சூரியனையும் குறிப்பன. அவர் தரித்துள்ள பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும், ஒற்றைக்கொம்பு காத்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளலையும் குறிப்பன வாகும். அவரிடம் விலங்குத்தலையும், மனித உடம் பும், தேவர் பாதங்களும் திகழ்கின்றன.

விநாயக வழிபாட்டைக் கூறும் நூல்கள் கணேச புராணம், முற்கல புராணம், பவிஷ்ய புராணம், கணபதியுப நிஷதம், கணேசகீதை முதலியனவும், இன்னும் விநாயக புராணம், பிள்ளையார் கதை முதலியனவுமாம்.

விநாயக வழிபாட்டில் முற்கலர், பார்க்கலர், மதங்கர், வியாசர் முதலானோரும், சிறுத்தொண்ட நாயனர், நம்பியாண்டார் நம்பிகள், ஔவையார், கச்சியப்பமுனிவர் முதலானோரும் ஈடுபட்டுப் பேரருள் பெற்றுய்ந்தனர். இன்னும் கபிலர், அதிராவடிகள், மெய்கண்டார் முதலானோரும் பெருமானுரைப் பெரிதும் வழிபட்டுய்ந்தவர்களாவர். விநாயகப் பெருமானைப் பாலகணபதி, வீர கணபதி, தருணகணபதி, ஏரம்ப கணபதி, மகாகணபதி, நிருத்த கணபதி, லட்சுமி கணபதி, வரகணபதி, தண்டி கணபதி, திரிமுக்கணபதி, யோக கணபதி, பஞ்சமுக கணபதி முதலாக முப்பத்திரண்டு திருவுருவங்களில் வழி படுவார்கள்,

### கற்பகம் போற்றி

''தன்னேங்கு மலரடியும் தனியோங்கு சாகைகளும்
மின்னேங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னேங்க நடமாடும் மன்றேங்க மதிற்குடபால்
பொன்னேங்கல் முன்னேங்கும் பொற்பமர் கற் பகம்போற்றி.

—கோயிற்புராணம்

ஆவணி மாதம் வளர்பிறைக் காலத்து நான்காம் நாள் விநாயக சதுர்த்தி.

விநாயகப் பெருமானுக்கு அறுகம்புல், வெள்ளெருக்கு மலர், வன்னிப்பத்திரம் அர்ச்சனைக்கு நல்லவை.

## தேநீர் வேறுபாடு

நாங்கள் தினமும் பலமுறை தேநீர் பருகுகிறோம். தேநீர் எந்தநேரமும் பருகலாம் என்று வெள்ளைக்காரர் கருதுவர். ரீ என ஆங்கிலத்தில் வழங்குவதைப் புலவர் அலக்சாண்டர் போப் ரே என்றே வழங்கியுள்ளார். தமிழர் தே என வழங்குவது அருமையாகத்தான் அமைந்துள்ளது. நாங்கள் தேயிலையை 1940 ஆம் ஆண்டின் பின்னரே வழக்கப்படுத்தி வருகிறோம். அதற்கு முன் நோயாளர்களுக்கு வெறுந்தேநீர் மருந்துக் குடிநீர்போலப் பயன் செய்தது.

ஆங்கிலேயரும் ரஷ்யரும் கருந்தேநீர் பருகும் விருப்பம் உள்ளவர்கள். வட இந்தியர் சூடான தேநீர் பருகுவர். ''கரம்தே'' என்பது அவர்கள் வழக்கு. பருகியபின் அச்சா என்பர். அவர்கள் தேயிலையை அவித்தே பருகுகிறார்கள்.

யப்பானியர் யஸ்மின் என்னும் மல்லிகைப் பூவினைத் தையும் சேர்த்து மணங்கமழப் பருகுவர். நாங்கள் செம்பரத்தம் பூவையிட்டுப் பருகலாம்தானே.

தேயிலை சீனரின் நாகரிகம். தேநீர் பருகும் கிண்ணமும் தட்டும் சீனரின் கண்டுபிடிப்பு. ஆங்கிலேயர் தேநீர் அருந்தப் பழகியமை கண்ட பாவனை. ஆங்கிலேயர் தேநீரைப் பருகும் இணக்கமான முறையில் சீனர் பருகவில்லை என்று குறை கூறியபோது, சீனன் என்ன சொன்னன் தெரியுமா? தேயிலை எங்களுடையது. கிண்ணமும் தட்டும் எங்களுடையவை. நீங்கள் உங்கள் இணக்க முறையைப் பருகுங்கள், நாங்கள் எங்கள் விருப்பம் போல் எங்கள் தேயிலையைப் பருகுவோம்.

★ தைப்பொங்கல் விழா காயத்திரி திருவிழா ★



# மில்க்வைற் மீனுட்சிப்பிள்ளை

உலக மாதாவாகிய உமாதேவியாரின் கடைக்கண் ணழகு காரணமாக வந்த திருநாமங்கள் மீனுட்சி, காமாட்சி, விசாலாட்சி என்பனவாம். மீனுட்சி என்னும் திருநாமத்தை கயற்கண்ணி என்றும், அழகு மிகுதிபற்றி அங்கயற்கண்ணி என்றும் போற்றுவர். அங்கயற்கண்ணி தன்னெடும் அமர்ந்த ஆலவாயாவதும் இதுவே என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் அன்று அருளிச்செய் துள்ளார்.

இவ்வாறே கடம்பவன புராணம், திருவிளையாடற் புராணம், குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள் முதலி யன யாவும் அங்கயற் கண்ணியாய மீனுட்சியம்மன் புகழ்பாடுகின்றன. மீனுட்சித் தாயார் முன்னர் முடி மன்னர்களை ஆட்கொண்டருளிய வண்ணம் பிற்காலத்து நாயக்க மன்னர்களையும் ஆட்கொண்டவள். அன்றி அண்மையில் 1807 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மதுரையில் அரசாங்க அதிபராயிருந்த பியர்ஸ் என்னும் வெள்ளைக்காரனுக்கும் பத்து வயதுப் பெண் குழந்தையாகப் பட்டப்பகலில் தோன்றிப் பாதுகாப்பு அளித்தவள். அந்த வெள்ளைக்காரன் ஆட்பட்டு அன்பு மீதூர்ந்து அள்ளிச் சொரிந்த வைர ஆபரணங்கள் இன் றும் அம்மையாரின் அழகுக்கு அழகு செய்கின்றன.

முன்னர் குமரகுருபரசுவாமிகள் அம்மையார் மீது மீனுட்சி அம்மன் பிள்ளைத்தமிழ் பாடி அரங்கேற்றிய போது, கேட்டுக்கொண்டிருந்த மன்னனின் மடியில் அர்ச் சகரின் குழந்தைப்பெண் வடிவில் வந்தருளிய அம்பிகை அமர்ந்திருந்து, மெதுவாக மன்னனின் முத்துமாலையைக் கழற்றிக் குமரகுருபர சுவாமிகளின் கழுத்திலிட்டு மின்ன லென மறைந்தருளியவள்.

தமிழக நாகரிகம் போல ஈழத்தமிழர் நாகரிகமும் திருக்கோயில் நாகரிகமேயாம். அந்த வகையில் எங்கள் பெண் குழந்தைகளுக்கு ஈஸ்வரியின் திருநாமங்களையே அக்காலத்தில் இட்டுப் பக்திபூர்வமாக அழைத்தல் வழக் கம்.

இற்றைக்குத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பின் ஞக இல்லறவாழ்வில் புகுந்த செல்லர் என்பாரும் சின் ஞச்சி என்பாரும் தாங்கள் 1903 ஆம் ஆண்டிற் பெற்ற அருமை மகளுக்கு மீனுட்சி எனப் பெயரிட்டனர். மீனுட்சி பிறந்த ஆண்டினைச் சொல்ல அரிய சோபகிருது என்று புலவர்கள் புகழ்வர். அவர் பிறந்த நட்சத்திரமும் தரணி ஆளவைக்கும் சித்திரை மாதத்துப் பரணி நாளாகும்.

யாழ்ப்பாணத்துக் கொட்டடி என்னும் பழையவூரில் சைவத்தமிழ் நாகரிகச் சூழலில் வாழ்ந்த மீனுட்சிப்பிள்ளை 1924 ஆம் ஆண்டு, காரைநகரைச் சேர்ந்த முருகேசர் கந்தையா என்னும் விற்பன்னரை விவாகஞ்செய்து, சிக்கன வாழ்வில் செம்மையாக இல்லறம் நடத்தி வந் தார்.


கந்தையா மீனுட்சி தம்பதிகளுக்கு அவ்வப்போது மைந்தர் நால்வரும் மகள் ஒருத்தியும் பிறந்தார்கள். அவர்கள் வாழ்வில் 1927 ஆம் ஆண்டு ஓரளவுக்குப் பொங்கும் காலமாயிருந்தது. அவ்வாண்டிலேயே கந்தையாபிள்ளை தமது மில்க்வைற் தொழிலகத்தை மிகச்சிறிய அளவில் குடிசைக் கைத்தொழிலாக ஆரம் பித்தார். அதே ஆண்டிலேதான் கந்தையாபிள்ளையின் இரண்டாம் மைந்தன் கனகராசா ஐப்பசி மாதத்துத் திருவோணநாளில் பிறந்தார். அக்காலத்தில் கந்தையா பிள்ளைக்கு ஊரில் சவர்க்காரக் கந்தையா என்னும் பெயர் வழங்கலாயிற்று. அவர் காலத்தில் பவுடர் கந்தையா, சென்ற் கந்தையா, வேட்டிக் கந்தையா, பத்தர் கந்தையா, பரியாரி கந்தையா முதலான பட் டங்களில் கந்தையாப் பேர்வளிகள் பலரிருந்தனர்.

கந்தையாபிள்ளை நகைச்சுவையோடு நையாண்டியும் கலந்து பேசுவதில் சாமர்த்தியம் வாய்ந்தவர். குடும்ப பாரத்தைச் சுமந்தவாறே குடிசைக் கைத்தொழிலை வளர்ப்பதில் பெரும் பங்களிப்புச் செய்தவர் மீனுட்சித் தாயார். மக்களை ஓரளவு படிக்கவைத்தபின், அவரவர்க் கமைவான உத்தியோகங்கள், தொழில்களில் ஈடுபடச் செய்தவரும் மீனுட்சிப்பிள்ளையேதான்.

மூத்தமைந்தன் இரத்தினகோபால் அவர்களை மலை நாட்டுத் தோட்டத் தொழில் பழகவைத்து அவர் பதவி உயர்ந்து பிளான்ரராகி வெள்ளையர் மதிக்க உத்தியோ கம் பார்த்தவர். இரண்டாம் மைந்தன் கனகராசா அவர்கள் இளம்வயதிலேயே அரைரிக்கற் பிரயாணஞ் செய்து கம்பளையில் வியாபாரமும் தோட்டப்பாடசாலை ஆசிரியர் வேலையும் சிலகாலம் பார்த்தவர். மூன்ரும் மைந்தன் அக்காலத்துப் பகிரங்க வேலைப்பகுதியில் ஓவசியராய் வேலையேற்றுப் பன்முக அறிவுபெற்றுயர்ந்த வர். நான்காமவர் வவநாதன் சிலகாலம் ஆசிரியரா யிருந்து வாத்தியார் எனச் செல்லமாக அழைக்கப்பெற்ற பின் வட பாரதநாடு சென்று லக்னே நகரில் சீனித் தொழிற்செய்கை பழகிவந்து, கந்தளாயில் வேலைபார்த் துப் பதவியுயர்ந்துள்ளார். ஐந்தாம் செல்வம் மீனுட்சிப் பிள்ளையின் அன்புமகள் தனலட்சுமி ஆவர்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

★ தாய் தான் கண்கண்ட முதல்தெய்வம் ★



## பசுவின் குரல்

அந்தக்காலத்தில் பசுக்களின் பெயர்கள் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலே, சுமனே என்பனவும் பிறவுமாம். பசுவின் காற்றூசி அஃதாவது கால்களில் பட்டுப் பறக்கும் புழுதி மனிதர் உடம்பில் படுதலால் மனிதன் ஸ்நானம் செய்த அளவில் புனிதனுகிருன். அந்த ஸ்நானத்துக்கு மாருதஸ்நானம் என்றும், வாயவ்யம் என்றும் பெயர். இத்துணை புனிதமான பசுவைப் புறமதத்தவர், பிறதேசத்தவர் மகிமையறியாமல் உண்கிருர்கள் என்ருல், மேலான தமிழன் அவருள்ளும் சைவன் உண்ணலாமோ? சைவப்பெருமாட்டி இறைச்சி சமைக்கலாமோ? எங்கள் வளர்ப்புத்தாயார் பசு என்பதை நீங்கள் மறக்கலாமோ? மகாலட்சுமி கோமாதாவில் குடிகொண்டிருப்பதால் பசுவைக் கொல்லலாமோ? பார்சி மதம், சீக்கிய மதம் எல்லாம் பசுவைப் போற்றும்போது, வணங்கும் போது, பண்பாட்டுச் சைவன் பசுவை உண்ணலாமோ? ஆநிரையைப் பாடுபட்டுக் காத்த தமிழன் பசுநிரைகளைப் பாடுபடுத்திக் கொல்லலாமோ? சிவாஜி இளைஞுக இருந்த காலத்தில் ஒருநாள் பசுவைக் கொன்றவனுடைய கையைவெட்டித் தண்டனைகொடுத்தார்.

## மில்க்வைற் மீனுட்சி...

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீனுட்சிப்பிள்ளை குடும்பத்தை உருவாக்கிய பெருமையைவிட அவர் குடிசைத்தொழிலை விருத்திசெய்து வந்த வண்ணம் பெரிது. அதில் அவருடைய கைவண்ணமும் பெரும் பங்களிப்புச் செய்தது. அந்தக் காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், வெள்ளைக்காரரின் வர்த்தக நிலையங்களான கொம்பனிகள் இறக்குமதிசெய்த சவர்க்கார வகைகளுடன், யந்திர வசதிகளற்ற குடிசைத் தொழிலில் உற்பத்தியான மில்க்வைற் போட்டியிட்டுத் தலையை நிமிர்த்தியது என்ருல் அது மீனுட்சிப்பிள்ளையின் அயரா உழைப்பு என்றே சொல்லவேண்டும்.

கந்தையாபிள்ளை ஆரம்பித்த மில்க்வைற் சவர்க்காரத்துக்கு நீலக்கட்டி என்றும் பெயர். அவரே முதன் முதலாகச் சவர்க்காரத்தில் நீலத்தையும் கலந்து சலவையின்போது வேலைச்சிரமத்தை வெகுவாகக் குறைத்தவர். சலவையின் பின் நீலந் தோய்த்தல் உலகவழக்கம். கந்தையாபிள்ளைக்கு இயந்திரசாதனங்கள் அன்று அகப்பட்டிருந்தால், அவர் இலங்கையருக்கே சவர்க்காரஞ் செய்யும் தொழிலதிபராய் மாறியிருப்பார்.

இயந்திரங்கள் இல்லாமையால் மீனுட்சிப்பிள்ளையின் கைவண்ணம் அவ்வேலையைச் செய்தது. அண்மையில் ஒருநாள் அவர் அருகில் வந்தமர்ந்து என் கைகளைத் தொட்டுப்பாருங்கள் என்ருர். பெண்களின் கைகள் மலர்போல மெதுவாக இருக்கவேண்டிய இடத்தில் அவருடைய கைகள் மரத்துக் கடினமாக இருந்தன. ''ஐயா என் கைகள் சவர்க்காரம் உருட்டிய கைகள்'' என்ருர். அந்தக்காலத்தில் சவர்க்காரக் கூழ் ஓரளவு இறுகியபின் சிறிதுசிறிதாக உருட்டிய உருண்டைகள் பேளைச் சவர்க்காரம் என வழங்கியது. சவர்க்காரம் உருட்டிய கைமலர்கள் காய்த்துக் கடினமாகிவிட்டன. காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன்காரியம் யாவிலும் கைகொடுக்க வேண்டும் என்று பாரதியார் பாடியவண்ணம் கணவன் கந்தையாபிள்ளையின் தொழிலில் கைவண்ணம் காட்டியவர் மீனுட்சிப்பிள்ளை. மீனுட்சிப் பிள்ளையின் தியாகம் பெரிது. அவர் தியாகவல்லி.

மில்க்வைற் தொழிலகம் இரண்டாம் மைந்தர் கனகராசா அவர்களின் பொறுப்பில் ஓரளவு யந்திரமயமாகி பைசிக்கிள், மாட்டுவண்டி யுகம்மாறி மோட்டார் வான் யுகம் கண்டதைக் கந்தையாபிள்ளை ஓய்ந்திருந்து கண்டு மறைந்தாரேனும், அவர் மறைவின்பின் பல்லாண்டுகள் வாழ்ந்த மீனுட்சிப்பிள்ளை, மில்க்வைற் தொழிலகம் பூரண வளர்ச்சி பெற்று, முதற்றரமான நிறுவனமாக மலர்ச்சி பெற்றதை முற்ருக முழுதாகக் கண்டு மகிழ்ந்தார். அவர் சில சமயம் உள்ளம் பூரித்து, அண்ணுந்து பார்த்து, இருகைகளையும் கூப்பி, எல்லாம் இறைவன்செயல் என்று வாழ்த்துதல் வழக்கம். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

மீனுட்சிப்பிள்ளைக்கு எவ்வித குறைவுமின்றி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரியார் என்றித் திறத்தார் எல்லோரும் பார்த்து வந்தார்கள். வயதுவந்த பேரன்மார் வெளியூர் போகும்போது, பாட்டி போயிற்று வாறேன் என்று பயணம் சொன்னதும் உடனடியாக மடியிலிருந்து நூறு ரூபாவுக்குக் குறையாமல் எடுத்துக் கொடுத்து முத்தமிட்டு அனுப்புவது அவர் வழக்கம். பேரப்பிள்ளைகள் அவரோடு மிகவும் செல்லமாக நடந்து கொள்வர். அவரும் மழலைபேசி, இரண்டாம் குழந்தைப் பருவத்தினராய் நடந்துகொள்வர். அவருக்குப் பூட்டப்பிள்ளைகளும் கைத்தொண்டு செய்து மழலைபேசியுள்ளார்கள்.

அவரும் ஆயிரம் பிறைகள் கண்டு, பூரணவாழ்வு வாழ்ந்து, அமரராயபோது பேரன் பேத்திமார், பூட்டப்பிள்ளைகள் வெம்பிப் புலம்பி அழுத காட்சி, அவர்களுடைய பொங்கி வழிந்த அன்புள்ளத்தைக் காட்டியது. அண்மையில் திருமணமான மகள் வயிற்றுப் பேத்தியொருத்தி, ''எங்கள் பாட்டி மீளப் பிறப்பாராகில்,

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

★ அறிவுமட்டும் போதாது பக்தியும்வேண்டும் ★




## புல்லும் பூடும்

புல்லாகிப் பூடாய் என்னுந் தொடரில் மாணிக்க வாசக சுவாமிகள் புல்லுக்கும் பூட்டுக்கும் ஓரிடம் கொடுத் தருளியுள்ளார். புற்களுள் அறுகும் பூடுகளுள் குப்பை மேனியும் மெத்தப் புகழ்பெற்ற தாவரவினங்கள். சித்த வைத்தியர்கள் இவற்றின் குணமகிமைகளை நன்முகக் கண்டு பயன்செய்து வழிகாட்டியுள்ளார்கள். சாதாரண மாகத் தம்மிஷ்டம்போல எங்கும் முளைத்துப் பரவும் இப்புல்லும் பூடும் இயற்கை எமக்களித்த பெரும் பிர சாதங்களேயாம்.

### அறுகம்புல்

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி என்று பெரியவர்கள் வாழ்த்தும் அறுகு, வீட்டில் நடைபெறும் மங்கலக் கிரியைகள் சடங்குகள் எல்லாவற்றுக்கும் தலைமை தாங்குவது. அறுகம் புல் பூசைக்குரியது. அறுகு சாத்து தல் ஒருவித அர்ச்சனை. தேவர்கள் சிவலிங்கங்களைத் தேடி அறுகுசாத்தி வழிபடுவது எங்களுக்குத் தெரியாது. நாளாந்த மங்கலச் சடங்குகளில் பிள்ளையார் பிடித்தால் உடன் வருவது அறுகம்புல். மங்கல நீராட்டும்போது பாலும் அறுகும் பாலறுகு எனச் சேர்ந்துள்ளன.

அறுகம்புல்லில் அமைந்துள்ள அற்புத சக்தி பெரிது. அது உணவுவழியில் ஊட்டச்சத்துள்ளது. மருத்துவ வழி யில் விடந்தீர்ப்பது. பாம்பைக் கடித்துக் கொன்ற கீரி ஓடிச் சென்று அறுகம்புல்லிற் படுத்து உருள்கின்றது. அறுகம்புல்லின் இளம் அலகுகளை நன்முகக் கழுவி அரைத் துப் பாலிற் கலந்து வற்றக்காச்சிப் பருகுவதால் அதன் அருமை தெரியும். குழந்தைகளுக்கும் பலவீனமடைந்த வர்களுக்கும் அறுகு வரப்பிரசாதம். இருதய நோயாளர் அறுகம் புல்லைக் கழுவி நீரிலிட்டுக் காய்ச்சி இளம் சூட் டில் பருகிப் பயன் பெறலாம். வெட்டுக் காயத்துக்கும் அறுகம்புல்லை அரைத்துக் கட்டிப் பயன் காணலாம்.

### குப்பைமேனி

குப்பையோடு குப்பையாய் வேலியோரம் எங்கும் முளைக்கும் சிறிய செடியை அதிசய பூடு என்பர். குப்பை மேனியின் மகத்துவம் பெரிது. குழந்தைகளின் கபக்கட்டு வேதனைகொடுக்கும் போது, சில வேளைகளில் அவர்கள் மூச்சுவிட முடியாமலும் துன்பப்படும்போது, உடன் நிவா ரணம் குப்பைமேனிச் சாற்றைக் கொடுத்து வாந்தி யெடுக்கச் செய்தலாகும். நெருப்புச் சுட்ட காயத்துக்குத் தேனுடன் கலந்த குப்பைமேனிச் சாறு கைகண்ட மருந்து.

வயிற்றுவலி, இரத்தமூலம் போன்ற உள்நோய்களுக் கும், தேனும் குப்பைமேனிச் சாறும் பருகுவதால் நன்மை பயக்கும். தோலில் விடக்கடி உபத்திரவம் உண் டாகும்போது குப்பைமேனிச் சாறும் சுண்ணும்பும் கலந்து பூசிப் பயன் காணலாம். குப்பைமேனியின் வாகடம் பெரிது. சுருக்கி எழுதுவது கடினம். இவ்வளவும் போதும்.

## மில்க்வைற் மீனுட்சி...

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் என் வயிற்றிலேதான் பிறப்பார். நான் அவருக்கு மீனுட்சி என்றே பெயரிடுவேன்'' என்று புலம்பினுள். பரந்த மனவிசாலமுள்ள மூதாட்டியின் பிரிவு எல்லோ ரையும் வெகுவாக வாட்டியது.


மீனுட்சிப் பிள்ளையின் மக்கள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் நிரம்பிய பெருங்குடும்பம் பலவூர்களிலும் செறிந்து வாழ்ந்தபோதிலும், கிழவியா ரின் மனவிசாலத்தால் எல்லோரும் ஒரே கூரையின்கீழ் வாழ்ந்தாற் போலும், விழுதுகள் தாங்கிய ஆலமரச் சூழல்போலும் வாழ்ந்தவர்கள். இத்தகை ஒற்றுமையும் நெருக்கமும் என்றென்றும் நிலவுவதாக. மீனுட்சிப் பிள்ளையின் பிரார்த்தனையும் இதுவேயாகும்,

### முதுமைக்காலம்

மில்க்வைற் மீனுட்சிப்பிள்ளை தன் முதுமைக்காலத் தில் ஒரே ஒரு மகளாய தனலட்சுமி நாகரத்தினம் அவர் களின் இல்லத்திலேயே வாழ்ந்துவந்தார். மகள்வயிற்றில் வந்த பேர்த்திமார் நால்வர் பாட்டியாரைப் பராமரிப்ப தைத் தங்கள் பாக்கியம் எனக் கருதிக் கண்ணைப்போலப் பாதுகாத்துவந்தனர். வாழ்க்கையில் சலிப்புத்தட்டாமல் மீனுட்சிப்பிள்ளை நீண்டகாலம் மனநிறைவோடு வாழ்வ தற்குப் பேர்த்திமாரின் கைத்தொண்டு பெருமளவில் பங்களித்தது.

மீனுட்சிப்பிள்ளையின் இறுதிக்கட்டம் 1985 டிசம்பர் முப்பத்தொராம் திகதி அறிகுறிகள் காட்டிற்று. அயலில் உள்ள வைத்திய நிபுணர்கள் சண்முகலிங்கம், தர்மலிங் கம், சிவபாதசுந்தரம் முதலானேரும், தமிழ்வைத்திய நிபுணர் குகமூர்த்தி அவர்களும் தக்கமருந்து வகைகள் கொடுத்து வேதனை எதுவுமின்றி அவரை நிம்மதியாக மூச்சுவிடச் செய்தார்கள். அவரும் அடுத்தநாள் 1986 ஜனவரி மாதம் முதலாம் நாள் நண்பகல் 12 மணிக்கு காமாட்சி அம்பாள் மணி ஓசையுடன் தமது இறுதி மூச்சை விட்டு, நெடுந்துயில் புரியலானுர். அவர் ஆன்மா சாந்தியடைய எல்லோரும் பிரார்த்திக்கிருர்கள்.

★ பிராணுயாமம் செய்வதால் ஆயுள் அதிகரிக்கிறது ★



மீனாட்சிப்பிள்ளை பக்தர் பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகளை மனையில் உபசரித்தல்

## Learn Your English

**Give one word for the group**

1 That which has a narrow neck
2 A horse across a river
3 He who is not a prosaic writer
4 A dog with a curious head
5 It is up when you are angry
6 An additional sign in number
7 The result of equality
8 Be sorry for your sins
9 Suffered for long time
10 Cuts some meat
11 The universal standard of gold
12 An allowance made for a woman
13 Such waters that rise and fall
14 The measuring device
15 A beautiful sea substance
16 To speak imperfectly
17 Floor covering
18 A little bit of salt

1 Bottle 2 Dam, 3 Poet, 4 Cur, 5 Blood, 6 Plus 7 Tie, 8 Repent, 9 Endured, 10 Chops, 11 Carat, 2 Alimony, 13 Tide, 14 Meter, 15 Coral, 16 Stammer 17 Rug 18 Pinch.

## அவிழ்த்துப்பாருங்கள்

(விடுகதை என்றும் நொடி என்றும் வழங்கும் இத்தொடரில் சிறுவர் சிறுமியர் அதிக விருப்பங்கொண்டுள்ளனர். செல்வன் சோ. உமாசுதன் முல்லைத்தீவிலிருந்தும், செல்வன் நாகமணி மகேந்திரன் சங்கானையிலிருந்தும் ஒரே மாதிரியான நொடிகளை அனுப்பியுள்ளார்கள். அவற்றுட் சில வருமாறு:

1 அம்மா கிடத்தக் கிடப்பான். எழுப்ப மற்றப்பக்கம் கிடப்பான்.
2 ஓடும் பாயும் நிற்கமாட்டாது.
3 அடி வயலுக்கு, நடு மாட்டுக்கு, நுனி வீட்டுக்கு
4 பகலிலே தூங்குவான், இரவிலே அலறுவான்
5 கிட்டக் கிட்டத் தெரியும், எட்ட எட்டப் போகும்
6 செலவில்லாமல் வீடுகட்டி நிலையில்லாமல் வாழ்வர்
7 நீரிலே பிறந்து, நீரிலே இறப்பான்
8 பறக்கும் ஆனால் பறவையல்ல, வாலுண்டு மிருகமல்ல
9 ஆயிரம்பேர் தடுத்தாலும் ஆர்ப்பாட்டத்தை நிறுத்தாது
10 உயர்ந்த மரத்திலே ஒரு இலையுமில்லை
11 நீண்டகாலம் வாழ்வதற்கு நெருப்பிலே குதிப்பான்
12 மரத்தின்மேல் பழம், பழத்தின்மேல் மரம்
13 மண்ணிற் பிறந்த மாயாண்டி, உரிக்க உரிக்கத் தோலாண்டி
14 உலர்ந்த மரத்தில் மலர்ந்தபூ, தலைக்குமேலே நிழல்தரும்
15 நாக்குண்டு, பல்லில்லை, நல்ல சத்தம் உண்டு

1 தோசை, 2 கடலலை, 3 நெற்கதிர், 4 ஆந்தை, 5 வானம், 6 கறையான், 7 உப்பு, 8 பட்டம் 9 கடலலை, 10 கைகாட்டிமரம், 11 செங்கட்டி, 12 அன்னாசி, 13 வெங்காயம், 14 குடை, 15 மணி

## செந்தமிழ்...

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலம்
தரை — தறை
உறுதி
திரம் — திறம்
தாழ்ப்பாள்
திராங்கு — திறங்கு
பலம்
திராணி — திறணி
வேறுபாடு
பிரிவினை — பிறிவினை
ஒடித்தல்
முரித்தல் — முறித்தல்
காய்தல்
வரட்சி — வறட்சி
விரைவு
விருவிறுப்பு — விறுவிறுப்பு

பிதிர்க் காரியங்களுக்குச் சிரத்தை வேண்டும்



# மதுரை மீனாட்சி

பாண்டிநாடே பழம்பதி, தென்பாண்டி நாடே சிவலோகம் என்றெல்லாம் பெரியவர்கள் போற்றுவர். பாண்டிநாட்டின் தலைநகர் மதுரை. அது இனிமையான நகரம். அதற்குக் கூடல் என்றும் பெயர். அங்கே உள்ள வனம் கடம்பவனம். கடம்பவனத்திலே கிடந்த சிவபெருமானின் திருவுருவத்தை முதலிற் கண்டவர் தனஞ்சயன் என்னும் வணிகன். தான் கண்ட புதுமையை அவர் குலசேகர பாண்டிய மன்னனுக்கு அறிவித்ததும், அவன் திருக்கோயில் அமைத்தான். அதுவே திருஆலவாய். திருவாலவாயாவதும் இதுவே என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பாடியருளியுள்ளார்.

திருவாலவாய் மதில்களாலும், கோபுரங்களாலும், பொற்றாமரை வாவியினாலும் அகன்ற பெரிய உட்பிராகாரம், வெளிப்பிராகாரங்களினாலும் திருவிழாச் சிறப்பினாலும் புகழ்பெற்றது. உயர்ந்த கோபுரங்களில் அழகிய உருவச்சிலைகள் களிநடம் புரிகின்றன.

கோபுரங்கள் நான்கு திக்குகளுக்கும் கலங்கரை விளக்கங்கள்போலக் கண்ணைக் கவர்ந்து கருத்தை இழுப்பன. தென்திசைக் கோபுரம் 170 அடி உயரமுள்ளது. இதில் 1511 உருவச்சிலைகள் உள்ளன. உயரமான இக்கோபுரத்தின் அடிப்பாகம் 108 அடி நீளமும் 67 அடி அகலமும் உள்ளது.

## மீனாட்சி திருமணம்

திருவாலவாய் என்னும் திருப்பதியை மதுரை என்றே வழங்குவர். மதுரை என்றதும் மீனாட்சித் தாயாரின் நினைவுதான் உண்டாகும். காசியில் விசாலாட்சி, காஞ்சியில் காமாட்சி, மதுரையில் மீனாட்சி, கண்களினழகாலும், கடைக்கண் பார்வையாலும், கருணைப் பெருக்காலும் பெயர் பெற்றவர்கள்.

மதுரையில் மீனாட்சி அரசு செய்து சிவபெருமானைத் திருமணஞ் செய்தவர். சிவபெருமான் மீனாட்சியிடம் வந்தருளியபோது சோமசுந்தரன் என்றும் சொக்கேசர் என்றும் திருநாமம் பெற்றார். சோமசுந்தரனின் அழகு மிகுதியால் எல்லோரும் சொக்கி இருப்பார்கள் போலும்!

இறைவனும் இறைவியும் திருமணஞ் செய்தனர் என்பது, உலகத்தவருக்குத் திருமணத்தின் தத்துவத்தையும், அறநெறியையும் உணர்த்துவதற்கேயாம். உமாதேவியார் மதுரையில் மீனாட்சியாகக் கொலுவிருக்கும் தன்மையில் உலகில் உள்ள சக்தி பீடங்கள் அறுபத்துநான்கினுள் மதுரை தலையாயது எனச் சிறந்துள்ளது. அங்கே மீனாட்சி அங்கயற்கண்ணி எனச் செந்தமிழ்த் திருநாமமும் பெறுவாளாயினள்.

மதுரை பாண்டிய மன்னரின் தலைநகரம். பழைய காலத்தில் மலையத்துவச பாண்டியன், மங்கை நல்லாள் காஞ்சனமாலையோடு இல்லறம் நடத்திப் புத்திர காமேஷ்டி யாகஞ் செய்த பயனக, ஓமகுண்டத்தில் தோன்றிய இறைவியே குழந்தையாக எழுந்தருளிக் காஞ்சனமாலையின் மடிமீதமர்ந்தாள். அவளுக்குத் தடாதகைப் பிராட்டி எனத் திருநாமம் வழங்கினர்.

மைந்தனை வேண்டி மகப்பேறு தரும் புத்திர காமேஷ்டி யாகஞ்செய்த மலையத்துவனுக்குப் புத்திரனுக்குப்பதிலாகப் புதல்வியே கிடைத்தாள்; அவளும் மூன்று தனங்களோடு தோன்றினள். மன்னன் கவலையைப் போக்க இறைவன் ஆறுதல் கூறியருளினர். மகளை இளவரசன் எனக்கருதி அரச காரியங்கள் பயிலவைக்கும்படியும், தடாதகைப் பிராட்டியார் தமக்குரிய கணவனைக் கண்டு நாணும்போது, மூன்றும் தனம் மறைந்துவிடும் என்றும் அரசன் உணர்ந்தான். ஆவன செய்தான். அவனுக்குப் பின் அரசுரிமை பெற்ற தடாதகைப் பிராட்டி மதுரைக் கடம்பவனத்து இறைவனை நாளும் வணங்கிச் செங்கோல் செலுத்தி மகாராணியென பெருமை பெற்றிருந்தாள். அவள் கன்னியாயிருந்து மதுரையை ஆண்ட காரணத்தால் அப் பொன் நாடு கன்னி நாடு எனவும் பெயர் பெற்றது.

"வரைசெய் பூண்முலைத் தடாதகை மடவரற் பிராட்டி
விரைசெய் தார்முடி வேய்ந்துதன் குடைமநு வேந்தன்
கரைசெய் நூல்வழி கோல்செலக் கன்னியாம் பருவத்து
அரைசு செய்தலாற் கன்னிநாடு ஆயதந் நாடு."

தடாதகைப்பிராட்டி அயல்நாடுகளையும் வென்றடக்கக் கருதித் திக்குவிஜயம் செய்து, வென்று வடக்கில் கைலைமலையையும் சூழப்படைகளை நிறுத்தி முற்றுக்கையிட்டாள். சிவபெருமானின் பூதப்படைகள் எதிர்க்க முடியாமல் சிதறியோடக் கண்ட திருநந்தி தேவர், சிவபெருமானிடம் விண்ணப்பித்தார். சிவபிரான் புன்முறுவல் பூத்துப் போர்க்களம் சென்று, கருணையோடு தன்னையே நோக்கியவாறு நின்றருளியதைத் தடாதகைப் பிராட்டியார் கண்டார்.

"ஒற்றைவார் கழற் சரணமும் பாம்பசைத்து
உடுத்தவெம் புலித்தோலும்
கொற்ற வாண்மழுக் கரமும் வெண் நீறணி
கோலமுந் நூல்மார்பும்
கற்றை வேணியும் தன்னையே நோக்கிய
கருணைசெய் திருநோக்கும்
பெற்ற தன்வலப் பாதியைத் தடாதகைப்
பிராட்டியும் எதிர் கண்டாள்."

அப்பொழுது பிராட்டியாரின் மூன்றும் தனம் மறைந்தது. பிராட்டியார் அச்சம் மேலிட அன்பு மீதூர நாணிக்கோணி, நிலத்தை நோக்கியவாறு ஒசிந்து, ஒல்கி நின்றாள். அவள் நிலைமையைக் கவனித்த அவளுடைய முதன் மந்திரியாகிய சுமதி அவளை நோக்கி

(17-ஆம் பக்கம் பார்க்க)

★ சிரத்தையோடு செய்வதால் சிராத்தம் என வழங்குகிறது ★

உ
சிவமயம்



## சுந்தரமூர்த்திநாயனர்

### திருப்பரங்குன்றம்

பண் — இந்தளம்

திருச்சிற்றம்பலம்

முண்டந்தரித் தீர்முது காடுறைவீர்
முழுநீறுமெய் பூசுதிர் மூக்கப்பாம்பைக்
கண்டத்திலுந் தோளிலுங் கட்டிவைத்தீர்
கடலைக்கடைந் திட்டதோர் நஞ்சையுண்டீர்
பிண்டஞ்சுமந் தும்மொடுங் கூடமாட்டோம்
பெரியாரொடு நட்பினி தென்றிருந்தும்
அண்டங்கடந் தப்புறத்தும் மிருந்தீர்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே.

திருச்சிற்றம்பலம்

இறைவனே! அடியோம் பெரியாரொடு நட்புக் கொள்ளுதல் இன்பந்தருவது என்று கருதியிருந்தோமாக, தேவரீர் தலைமாலையை அணிந்துள்ளீர், மயானத்தில் வாழ்கின்றீர், கொடிய முரட்டுப்பாம்புகளைக் கழுத்திலும் தோளிலும் கட்டிவைத்துள்ளீர், தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்து கொண்டுவந்த கொடிய ஆலகால விடத்தை எளிதாக உண்டருளினீர், இந்தப்பெரிய அண்டத்துக்கு அப்பாலும் இருக்கின்றீர், அதனுல் ஊனின் திரட்சியாய இவ்வுடம்பைச் சுமந்துகொண்டு, தேவரீரோடு தொடர்புகொள்ள வல்லேமல்லோம். எனவே தேவரீரை அண்டி அணுகி நின்று பணிவிடை செய்வதற்கு வெகுவாக அஞ்சுகிறேம்.

## மில்க்வைற் மணப்பந்தல்

இணுவில் வாசரும் மில்க்வைற் தொழிலகத்தில் வேலை பார்ப்பவருமான திருநிறை செல்வன் க. வே. சிவானந்தசுந்தரம் அவர்கள், குப்பிளான் ஊரைச் சேர்ந்த திருநிறைசெல்வி பிரேமா செல்லையா அவர்களைத் தைத் திங்கள் பூரணையும் புனர்பூசமும் கூடிய வேளையில் 25-1-86ம் நாள் திருமணஞ் செய்த நற்செய்தி கேட்டு மகிழ்ந்து வாழ்த்துகின்றேம். நீங்கள் இருவரும் இறைவனருளால் எல்லாப் பேறுகளும் பெற்று நீண்டகாலம் இனிது வாழ்வீர்களாக. மங்களம் மங்களம் மங்களம்.

## நல்ல ஆங்கிலம்

நாம் நமது தமிழை நற்றமிழ் என்றுற்போல ஆங்கிலேயர் அருமைவாய்ந்த தங்கள் மொழியை, நல்ல ஆங்கிலம் "*Good English*" எனப் போற்றிப் பேணுவர். நல்ல ஆங்கிலம் பேசியும் எழுதியும் புகழ்பெற்ற அண்மைக் காலப் பெரியவர்களுள் ஒருவர் பிரதமர் சேர் வின்சன் சேர்ச்சில். சேர்ச்சில் தமது செல்வாக்கு, செருக்கு மிகுதியால் இந்தியாவையும் காந்திமகான் முதலான பெரியவர்களையும்பற்றி இழிவாகப் பேசியும் எழுதியும்வந்ததோடு, மிஸ் மேயோ என்னும் வெள்ளைக்காரியை ஏவி, இந்தியத் தாய் "*MotherIndia*" என்னும் நூலையும் எழுதுவித்தவர்.

சேர்ச்சில் யுத்தமந்திரியாய் இருந்து இரண்டாம் உலக மகா யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தி ஜேர்மனியை முறியடித்தபின், தன்நாட்டு மக்களின் தீர்ப்பில் தோல்விகண்டவர். அவர் வெற்றியும் தோல்வியும் இறுமாப்புள்ளவர்களுக்கு ஒரு பாடம்.

சேர்ச்சில் எப்படிப்பட்டவராயினும் அவர் பிரதமராவதற்கு முன் என்னவாயிருந்தார் என்று ஆராயும்போது, அவர் முன் படிப்பில் பின்தங்கியவராய், பரீட்சைகள் தவறியவராயிருந்தவர். பின் முயற்சி எடுத்து அரசியலில் புகுந்து, குடியேற்ற நாட்டு உபமந்திரி, வர்த்தக சங்கத்தலைவர், உள்நாட்டு மந்திரி, கடற்படைப் பெருந்தலைவர், லங்காசர் மாகாணத் தலைவர், ஆயுதப் பகுதி மந்திரி, யுத்தமந்திரி பதவிகளைக் கண்டவர் நல்ல பேச்சாளர், நல்ல எழுத்தாளர்.

## கல்விவாரம் பாடசாலைத் தினம்

ஆண்டுக்கொருநாள் ஆடம்பரமாக ஏதாவதொன்றை நினைவுகொள்வதோ, அன்றி ஒருவார காலம் எதையும் கொண்டாடுவதோ போதா. என்றும் கொண்டாடவேண்டியவை இவை.

ஆறுமுக நாவலரவர்கள் முதற் பாலபாடத்திலேயே கடவுள் படைக்கிறுர், குரு உபதேசிக்கிறுர், மாணக்கன் வாசிக்கிறுன் என்று தொடங்கியுள்ளார். இன்னும் மெள்ள வாசி, தெளிவாகப் பேசு, குருவை வழிபடு, குரு வாக்கைத் தட்டாதே, உபாத்தியாயருக்கு அமைந்துநட, கல்வியே அழியாத செல்வம், வீண்நேரம் போக்காதே, புத்தகத்தைக் கிழித்துப் போடாதே, தினந்தோறும் பள்ளிக்கூடத்துக்கு வா, எவர்களோடும் இனிய வார்த்தை பேசு, புத்தகத்தை எடுத்துப் புதுப்பாடத்தையும் பழம் பாடங்களையும் படி என்றெல்லாம் சொல்லுவர்.

இன்னும்,

பள்ளிக்கூடத்துச் சுவரிலாவது தூணிலாவது சார்ந்து அதை அழுக்குப்படுத்தாதே, சுவரையாவது குறட்டையாவது கீறுதே, உடையாதே. பள்ளிக்கூடத்தில் கல்வியில் மாத்திரமே உன் கருத்தை இறக்கு.

உபாத்தியாயர் உன்பாடத்தை விளக்கும்பொழுது கவனமாகக் கேளு.

பள்ளிக்கூடம் கலைத்தபின்பு நேரே வீட்டுக்குப்போய் விடு, அங்கும் இங்கும் அலையாதே.

★ நமஸ்காரம் என்பது மமதை இல்லாத வணக்கம் ★



## ரோல்ஸ்ரோய் சொன்ன கதை

[ரஸ்யா நாட்டைச்சேர்ந்த கவுண்லியோ ரோல்ஸ்ரோய் (9-9-1820 — 20-11-1910) கதையுலகில் பெரும் பெயர் பெற்றவர். அவர் தமது கதைகள்மூலம் சமூகத்தை வெகுவாகத் திருத்தியவர். அவருடைய கதைகளைப் பிற நாட்டார் பலரும் பயன்படுத்தி நாட்டைத் திருத்தினர். மகாத்மாகாந்தி அடிகள் கூட அவருடைய கதைகளை வெகுவாக விரும்பிக் கையாண்டுள்ளார். யாழ்ப்பாணத்துச் சைவப் பெரியார் புலோலி சு. சிவபாதசுந்தரம் அவர்கள் தமது சைவபோதக் கதைகளில் துளசித்தாமர் எனவரும் கதையையும் கையாண்டதாக எமக்குச் சூசகமாகக் கூறியுள்ளார்.]

### வர்த்தகனும் காசுப்பையும்

பெருஞ்செல்வனான வர்த்தகன் ஒருவன் ஒருமுறை தன் காசுப்பையை எங்கேயோ தவறவிட்டுவிட்டான். அவன் உடனடியாகத் தன் காசுப்பையில் இரண்டாயிரம் ரூபிள் நாணகங்கள் இருந்ததாகவும் அதனைக் கண்டு எடுத்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபிள் கொடுப்பதாகவும் தெரியப்படுத்தினான்.

ஏழைத் தொழிலாளி ஒருவன் அதனைக் கண்டெடுத்துக் கொண்டுபோய் வர்த்தகனிடம் ஒப்படைத்துவிட்டுத் தனக்குரிய சன்மானத்தைக் கேட்டு நின்றான்.

காசுப்பையைக் கண்டதும் வர்த்தகனுக்கு நினைவு மாறியது. தொழிலாளியை ஏமாற்றிக் கலைத்துவிடக் கருதி அவனைப்பார்த்து, "ஐயோ என் காசுப்பையில் இருந்த விலையுயர்ந்த இரத்தினக் கல்லை நீ எடுத்துவிட்டாய், அந்தக்கல்லைக் கொண்டுவந்து தந்தால் உனக்குரிய ஆயிரம் ரூபிளையும் தரலாம் என்றான்.

தொழிலாளி மனம் வருந்தி, நீதவானிடம் சென்று முறையிட்டான். நீதவான் இருவரையும் மன்றத்துக்கு அழைத்து விசாரித்தபோது, வர்த்தகனைப்பார்த்து, உன்னுடைய காசுப்பையில் இரத்தினக்கல் இருந்தது உண்மையானால் உந்தப்பை உன்னுடையதல்ல. உதற்குள் இரத்தினக்கல் இல்லாததால் உது தொழிலாளிக்கே உரியது. அவன் பையின் உரிமையாளர் வந்துகேட்டால் கொடுக்கலாம். பையை அவனிடம் கொடு என்று தீர்ப்புச் சொன்னார். வர்த்தகன் தன் வாயைப் பொத்தியவாறு மன்னிப்புக்கோரித் தொழிலாளிக்கு ஆயிரம் ரூபிளையும் கொடுத்தான்.


## 1986 பெப்ருவரிமாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சனி | — | இரவு 10-49 மேல் அட்டமி |
| 2 | ஞாயிறு | — | அட்டமி நவமி |
| 3 | திங்கள் | — | மாலை 6-12 வரை நவமி |
| 4 | செவ்வாய் | — | இலங்கை சுதந்திர தினம் |
| 5 | புதன் | — | ஏகாதசி விரதம், பெரும்புலவர் சித்திலெப்பை தினம் |
| 6 | வியாழன் | — | பிரதோஷ விரதம், மாத்தளை முத்துமாரி கொடி |
| 8 | சனி | — | அமாவாசை விரதம் |
| 12 | புதன் | — | நல்லையாதீன முதற்குருவின் பூசை விபூதித்திருநாள் |
| 13 | வியாழன் | — | தமிழ் மாசி மாதப்பிறப்பு ஊரெழுப்பிள்ளையார் கொடி |
| 15 | சனி | — | முன்னேஸ்வரம் கொடி |
| 16 | ஞாயிறு | — | கார்த்திகை விரதம் |
| 17 | திங்கள் | — | அட்டமி பகல் 2-59 முதல் |
| 18 | செவ்வாய் | — | அட்டமி - நவமி மாட்டின்லூதர் நினைவு |
| 19 | புதன் | — | கந்தபுராணம் தந்த கச்சியப்ப சிவாசாரியர் குருபூசை |
| 20 | வியாழன் | — | ஏகாதசிவிரதம் |
| 22 | சனி | — | சனிப்பிரதோஷ விரதம் தமிழ்பெரியார் வி. கனகசபைப் பிள்ளை நினைவு |
| 23 | ஞாயிறு | — | நடேசர் அபிடேகம் நகுலேசுவரர் கொடி, மாத்தளை, ஊரெழு தேர் |
| 24 | திங்கள் | — | பூரணை விரதம், மாசி மகம் |
| 26 | புதன் | — | மாசி உத்தரம் திருவள்ளுவர் குருபூசை |
| 28 | வெள்ளி | — | முன்னாள் இந்திய சனாதிபதி இராசேந்திரபிரசாத் நினைவு |

## செயற்கரிய செய்த செம்மல்

கலைக்கதிர் என்றால் மாதந்தோறும் இதழ் இதழாய் முப்பத்தாறு மலர்களில் மலர்ந்த நாநூற்று முப்பத்திரண்டு இதழ்களை மனங்கொண்டு மதிக்கும்போது என்ன சொல்லுவதென்று தெரியவில்லை. கலைக்கதிரில் கலைவளம் நிரம்பி வழிந்தது. இடையிடை மலர்ந்த சிறப்பிதழ்கள் அபூர்வ படைப்புக்கள். இவற்றையெல்லாம் அபிவிருத்தியடைந்துவரும் கோவை மாவட்டம் சாதித்தது என்றால், அங்கே சாதனைபுரிந்த சதுரர் யாவர் என்பது கேள்வி. விஞ்ஞானக்கல்வி நிரம்பப்பெற்ற கலாநிதியான தாமோதரன் என்பது விடை. இந்தத் தரம்வாய்ந்த மேதைக்கு யார்தாம் தரம், எவர் தாமோதரம் என்று புகழவேண்டியிருக்கிறது. ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு அற்புதமான விஞ்ஞானம், வானவியல், உயிரியல், தாவரவியல், அணுவியல், புவியியல், புவிச்சரிதவியல், அறிவியல் வரலாறு முதலிய துறைகளை எல்லாம் வாழைப்பழத்தில் ஊசிபோல ஏற்றி வழிப்படுத்திய செம்மல் தாமோதரம்தான். இதழிதழாய் இயல்கள் பலவற்றை இணையில்லா ஊக்கத்தோடு தேனாய்ப் பாலாய்ப் பருகவைத்த பெரியவர் தாமோதரன். முன்னமொரு மருத்துவன் தாமோதரன் மக்களுக்கு வாழ்வளித்தவர். இன்றைய தாமோதரன் மக்களுக்கு வாழ்வியல் பயிற்றியவர்.

★ அடுப்படியில் அம்மியும் குழவியும் சிவலிங்க மயமானவை ★



## திரிசூலம்

முழுமுதற் கடவுளாய சிவபெருமானுக்குத் திருவுருவங் கற்பிக்கும்போது, அங்கம், பிரதியங்கம், சங்கம், உபாங்கம் ஆகிய அருள் வடிவங்கள் அனைத்தும் அடங்கும். இக்கருத்து திருமுறைகளிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் கூறப்பெற்றுள்ளது.

சங்கம் என்னும்போது ஞானத்திரயம் என்னும் திரிசூலம் குறியாய் அமையும். இச்சங்கமத்தில் வச்சிரம், அபயமுத்திரை, நாகம், பாசம், அங்குசம், கண்டை தீ முதலியனவும் இடம் பெறும்.

திரிசூலம் சிவபெருமானின் சைவப்பேரரசின் தெய்வத் திருக்கோலத்தின் செங்கோல். சிவபெருமான் திருக்கரத்தில் தாங்கியுள்ள திரிசூலம் அவரின் சிவதர்மத்தின் குறியுமாம். இது மூவுலகத்திலும் சென்று செறிந்து, தர்மத்தை நிலைநாட்டுவது. இது இச்சை, கிரியை, ஞானம் என்னும் முக்குணங்களையும் குறிப்பதுமாகும்.


இச்சையாவது ஆன்மாக்களுக்கு முத்தியின்பங் கொடுக்க விரும்பும் விருப்பமாகும். முத்திகொடுப்பதற்கு வேண்டும் அறிவு ஞானமாகும். அறிந்தவைகளைச் செய்யும் செயல் கிரியையாகும். இத்தகைய ஆற்றல் வாய்ந்த திரிசூலம் முருகன் திருக்கரத்தில் மூவிலை வேலாய் அமைகிறது.

திரிசூலம் பொது மக்களிடையே வைரவக் கடவுளுக்குரிய அருவுருவமாக அமைகிறது. வைரவமூர்த்தம் காவல் தெய்வ மூர்த்தமாய் சேத்ரபாலகர் என்னும் திருநாமங் கொண்டவராய், அடியார்களைக் காத்தருளிய வண்ணத்தில் உண்டான ஆனந்த கோலாகலப் பொழிவினராய், விட்டைக்காக்கும் நாய் வாகனத்தராய் விளங்குவர். சிவதத்துவத்தினின்றும், தோன்றிய தன்மையில், வைரவரைச் சிவபெருமானின் மைந்தர் என வழங்குவர். சிவபெருமான் கடுந்தவஞ் செய்த அருச்சுனனுக்குக் கொடுத்தருளிய பாசுபதாஸ்திரம் இந்தத் திரிசூலத்தின் அம்சத்தில் அமைந்ததாகும். அதிக ஆற்றல் வாய்ந்ததும் அருள் நிறைந்ததுமாய திரிசூலம் வழிபாட்டுக்குரியதாய் நிலவுகிறது. வழிபடுவோமாக!

திருச்சிற்றம்பலம்

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம் தோன்றும் -
தோன்றும்,
கடியேறு கமழ் கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில் வெண் குழைதோடு கலந்துதோன்றும்,
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்,
எழில் திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொழிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

திருச்சிற்றம்பலம்




## நல்லவராகி நல்லதையே செய்யுங்கள்

நல்ல சிந்தனையிலோ, நல்ல செயல்களிலோ, நல்ல தொழிலிலோ ஈடுபட்டிருப்பதைப் போன்ற இன்பம் என்றுமில்லை, எங்குமில்லை, எவருக்குமில்லை. நல்ல சிந்தனையிலீடுபட்டிருப்பவரிடம் கெட்டவை எவையும் புகமாட்டா. நல்லனவற்றால் சூழ்ந்து காவல்காக்கப்பெற்ற மனம் கெட்டவை எவற்றையும் உள்ளே விடமாட்டாது. நன்கு பாதுகாக்கப்பெற்ற கோட்டைக்குள் பகைவர் புகமுடியாதவாறு போல இந்நிலை ஏற்பட்டிருக்கும். காவலில்லாத மனத்துள்ளேதான் கவலை உட்புகமுடியும், அன்றி ஒருவர் தீயனவற்றைச் சிந்தித்துக்கொண்டிருந்தால் தான் கவலை புகுதல் இயலும். தீயனவற்றைச் சிந்திக்கவோ, ஈடுபடவோ, செய்யவோ துணியாத மனத்திலேதான் உச்ச மகிழ்ச்சியும் இன்பமும் கொடிகட்டிப் பறக்கும்.

## லண்டன் சைவமுன்னேற்றச் சங்கம்

மேற்குநாட்டு நவநாகரிகம் தலைவிரித்தாடும் உலகப் பெருநகரான லண்டனின் சைவப்பண்பாட்டைப் பேணிப் பாதுகாத்து வளர்த்து வரும் சங்கத்தாரை எவ்வாறு பாராட்டுவதென்று தெரியவில்லை. சைவசமயப் பெருங்குரவரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மதுரை மாநகரில் மங்கையர்க்கரசியார் மத்தியில், ''பரசமயத்திடை தொண்டு செய்யும் உமைக்காணவந்தனம்'' என்றருளினார். உம்மைக்கண்டுபோக நாம் வந்தோம் என்றாற் போல, தென்னகத்துமடாதிபதிகள் ஆங்கெழுந்தருளிப் பாராட்டினாலோ என்று சொல்லிவைக்க ஆசையாயிருக்கிறது.

★ வதந்திகள் தர்ம வழியிலே பரவுவது குறைவு ★

## புதுமைக் கவி வால்ட் விட்மன்



புதுமைக்கவி
வால்ட விட்மன்

அண்மைக் காலத்தில் வாழ்ந்த அமெரிக்கரான பெரியார், அன்றொருநாள் தமக்குண்டான உள்ளொளி வெளிச்சத்தில் புறவுலகை ஊன்றிப்பார்த்துப் பெருமூச்சுவிட்டார். உலகம் திருந்தவேண்டும் என்று கருதித் தம் கருத்தை வெளியிட்டார்.

"இன்றைய நிலையில் எங்கள் சமுதாயச் சுற்றுடல் வெறும் பேச்சழகிலும், பூச்சழகிலும் வெறும் பகட்டுப் போர்வையிலும் சுயநலப் போக்கிலும், போட்டி பொறாமை மனப்பான்மையிலும், உழுத்துப்போன பழக்க வழக்கங்களிலும் மோகங்கொண்டு உள்ளே உள்ளீடில்லாமல் ஒன்றுந் தெரியாமல் நிலவுகிறது, இந்த நிலைமை மாறவேண்டும்.

வருங்காலச் சமுதாயத்துக்கு நாம் வழிவகுப்பதானால், வாழ்வளிப்பதானால், திடமான குழந்தைகளை உருவாக்குதல் வேண்டும். சமுதாயத்துக்கு எழுச்சி தரும் இலக்கியங்களை உண்டாக்குதல் வேண்டும். நல்ல இலக்கியந் தான் நல்ல சமுதாயத்துக்கு நல்ல எழுச்சி தருவது. அது வாழ்வின் விளக்கமாய், உயிருடன் ஒட்ட வல்லது. இன்றைய நிலைமை மாறுவதானால் போலி சனநாயகம் போயகன்று உண்மையான சனநாயகம் உருவாகுதல் வேண்டும். சனநாயகத்துக்கும் தனியொருவரின் சுயநலநாயகத்துக்கும் வெகுதூரம். உடலுறுதி, மனவுறுதி, சித்தவிசாலம், ஆத்மசுதந்திரம், விரிவான கலைப்பயிற்சி, பயனுள்ள தொழிற்பயிற்சி, தாராளமான நட்பு, பெருந்தன்மையான ஈகைக்குணம், ஒருவரையொருவர் கொள்ளையடிக்காத குணமகிமையில் மலர்ந்த அன்யோன்யம், பரஸ்பர நன்நம்பிக்கை, சாதி மதப் பிடிவாதமற்ற நேர்மையான போக்கு, சுதந்திரமான நிமிர்ந்த நன்னடை, செல்வச் செருக்கு, கல்விச் செருக்கற்ற சரளமான உதவி என்பனவாதியன அமைதல் வேண்டும். நல்ல சனநாயகம் பொருளைவிட மனிதனை உயர்வாக மதிக்கவேண்டும். அதிகார வலுவைவிட அடிப்படை மனிதவுரிமையை மேலாக மதித்தல் வேண்டும். சனநாயகம் இயற்கையோடு இயைந்த நல்வாழ்வை மலர்த்துதல் வேண்டும்.

## லண்டன் கோப்பி இல்லம்

பதினேழாம் நூற்றுண்டில் ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றிய காலத்தில் கோப்பிப் பானம் ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றத்தொடங்கியது. லண்டன், வியன்னு ஆகிய ஐரோப்பிய தலைநகரங்கள் இரண்டு கோப்பிக்கு வரவேற்பளித்தன. லண்டனில் டானியேல் எட்வேட்ஸ் என்னும் ஒருவர் லண்டனில் 1670ஆம் ஆண்டில் முதற்கோப்பிக்கடையை ஆரம்பித்தார். நாளடைவில் லண்டன் நகரமெங்கும் கோப்பிக்கடைகள் திறக்கப்படவே, பெரும் புலவர்கள் எல்லோரும் கோப்பிக் கடைகளை மொய்த்து, அங்கே அருந்தியவாறே பெரிய இலக்கிய வட்டங்களை உண்டாக்கி இலக்கிய வளஞ்சிறக்கப் பாடினுர்கள், எழுதினுர்கள். கோப்பியில்லம் Coffee house என வழங்கியது.

## பறவைகளின் வயதெல்லை

| | பறவைகள் | | வயது |
|---|---|---|---|
| 1 | கோழி | — | 10 |
| 2 | கவுதாரி | — | 15 |
| 3 | புரு | — | 20 |
| 4 | கொக்கு | — | 24 |
| 5 | மயில் | — | 30 |
| 6 | வானம்பாடி | — | 30 |
| 7 | ஊர்க்குருவி | — | 40 |
| 8 | வாத்து | — | 50 |
| 9 | கிளி | — | 50 |
| 10 | நாரை | — | 60 |
| 11 | காகம் | — | 100 |
| 12 | அன்னம் | — | 100 |
| 13 | கழுகு | — | 100 |

## படிக்கும் பழக்கமும் புத்தகப் பெருக்கமும்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் கணித்தவண்ணம் இந்தியாவில் தமிழ்நாட்டிலேதான் பத்திரிகைகள், புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் அதிகமாயிருப்பதோடு வெளியீடுகளும் அதிகமாக இருக்கிறதென்று கண்டனர். தமிழா உன் தரமான படிப்பாற்றலைக் காட்டிவிட்டாய் உனக்கு எம் பாராட்டு.

தென்மொழிகளில் நூல்கள் வெளியிடும் தாபனம் இரண்டு ஆண்டுகளில் நூறு புத்தகங்கள் வெளியிட்டமை தென்திசையுயர்வுக்கு எடுத்துக்காட்டு.

### கழுகுக் கண்

பறவைகளுள் கழுகு வலியது, உயரப்பறப்பது, தூரத்தில் உள்ளதைக் கண்டறிய வல்லது. அது ஒருமைல் தூரத்தில் உள்ள உணவைக் கண்டறிய வல்லது.

★ உண்மை ஊற்றெடுப்பது கடமையிலிருந்தே ★



## பொச்சாவாமை

**செய்ய வேண்டிய காரியத்தில் சோர்வில்லாமை**

**அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை**
**பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.**

அச்சம் உடையவர்களுக்குக் காடு, மலை, நீர்நிலை முதலாய அரண்கள் பயன்தராமை போல, செல்வமும் சோர்வுள்ளவர்களுக்கு எவ்வித பயனும் தருவது இல்லை.

### Freedom from Negligence

*To the fearful cowards no fortress give safety, even so to the forgetful there is no benefit even though there may be other advantages.*

சிந்தனை விருந்து

## பேராசிரியர் பெருமாள் கர்நாடகம்

1. கருவாட்டு வாணிபஞ் செய்து ஆயிரம் ரூபா சம்பாதிப்பதைவிடப் பூவாணிபஞ் செய்து ஐந்நூறு ரூபா சம்பாதிப்பது மேல்.
2. அறிவுக்காகப் படிப்பவன் அறிஞனுவான். ஆனல் வெறும் பட்டத்துக்காகப் படிப்பவன் பட்டம் பெறுவதுடன் சரி. அவன் ஒருபோதும் அறிஞனுக மாட்டான்.
3. எது எது எங்கெங்கு இருக்கவேண்டுமோ அது அது அங்கங்கே இருந்தால் தான் நல்லது. மூக்கு இருக்க வேண்டிய இடத்தில் காதும், காது இருக்கவேண்டிய இடத்தில் மூக்கும் இருந்தால் நன்ருக இருக்காது.
4. மிகச் சிறு விதையிலிருந்து மிகப்பெரிய ஆலமரம் தோன்றுகிறது. மிகச்சிறிய நீரோடை அகன்று விரிந்து பேராருக மாறுகிறது. ஒருரூபாய் வருவாய் ஒரு இலட்சமாக வளர்கிறது. மிகப்பெரிய சாதனையின் தொடக்கம் மிகச்சிறிதாகத்தான் இருக்கிறது.
5. மிகப்பெரிய திட்டம் தீட்டுவதற்குக் கோடிக்கணக்கில் பணம் இருந்தால் மட்டும் போதாது. பரந்த நோக்கும் இருத்தல் வேண்டும்.

## நல்லை ஆதீனம்

வட இலங்கையில் பழைய காலத்தில் வடமராட்சியில் வரணியூரில் ஒரு ஆதீனம் நிலவியது. நீண்டகால இடைவெளிக்குப் பின் நல்லூரில் உருவான ஆதீனம் நல்லைத் திருஞானசம்பந்தர் என ஞானசம்பந்த பரமாசாரியரின் திருநாமத்தால் சமயகுரவராதீனமாக மலர்ந்தது. இதனை மலர்த்தியவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளாவர். தமிழ் நாட்டில் மதுரையில் நிலவும் திருஞானசம்பந்தர் ஆதீனம் 1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்தது. அதில் தீட்சையும் உபதேசமும் காவியும் பெற்ற மணிஐயர் என்னும் பூர்வாசிரமப் பெயர் பெற்ற பெரியார் நல்லை ஆதீனத்தை நமக்குத் தந்துள்ளார். இம் மாதம் குருமணியாய அவருடைய தினம் வருகிறது. சைவம் வளர்க்கும் சைவாதீனம் எமக்கு அத்தியாவசியமானது.



மீனாட்சிப்பிள்ளை, தன் மகள் வயிற்றுப் பேத்திமாருடன் செல்லங் கொஞ்சுதல்

★ முருகன் கைவேல் எல்லாவற்றையும் வெல்வது ★



## இராசேந்திரபிரசாத்

இம்மாதம் இருபத்தெட்டாம் நாளில் நினைவுக்குரிய பெரியவர் இந்தியக் குடியரசின் முன்னுள் சனதிபதி. இந்தியாவின் முதற்சனதிபதியாய பெரியார், பல துறைகளிலும் முதல் இடம் வகித்த சாதனை புரிந்தவர். படித்த போதும், பட்டம் பெற்றபோதும் அவருக்கு முதலிடம். முதற்பிரிவில் முதல்வராய்ப் பட்டம் பெற்றவர். (First in First Class.) அவர் வாழ்ந்த காலம் 1884 - 1963 ஆகும். அவரின் பெரும் பதவிக்காலம் 1950 - 1962 ஆகும், காந்தியடிகளினுல் காந்தமேற்றப்பெற்றவர்களுள் அவரும் முன்னேடியாவர். இந்திய குடியரசின் அரசியல் யாப்பைத் தயாரித்தவர்களுள் அவரும் அம்பேத்கார் என்பாரும் பெயர் பெற்றவர்கள். அவர் இலங்கைக்கு அளித்த பங்களிப்புகளில் ஒன்று உத்தமர் ஒருவரை உருவாக்கி விட்டமை. மயிலிட்டி சுவாமிநாதன் வட இந்தியாவில் கல்விகற்ற காலத்தில் இராசேந்திரபிரசாத் பல்கலைக்கழக விடுதித் தலைவராயிருந்து சுவாமிநாதனை மேற்பார்வை செய்து, "இலங்காதிபதி" "இராவணேசுவரன்" என்றெல்லாம் நகைச்சுவைபடப் பேசி வழிகாட்டியவர். பாரதம் என்னும் இந்தியா உலகிலேயே மிகப்பெரிய சனநாயக நாடு, இந்த நாட்டுத் தலைவரின் அதிகாரமும் மிகப்பெரிது. ஆனுல் இராசேந்திரப்பிரசாத் பூப்போன்ற மெல்லிய உள்ளமும், குழந்தைபோன்ற மனப் பரிசுத்தமும் கொண்டவர். அவர் 79 ஆண்டுகள் வாழ்ந்தும் அறனை பெயராது அறிவாளியாயே இறுதிவரை இருந்தார்.

இந்திய பிரதமர் நேரு இராசேந்திரருக்குரிய மதிப்பைக் கொடுத்து, அரசகாரியம் பார்த்தார். இராசேந்திரரை அடிப்படை இந்தியர், இந்திய பண்பாட்டின் அடிப்படை, கிராம மக்களின் அன்பர் என்றெல்லாம் போற்றியுள்ளார். "இராசன்பாபு" என்பது இராசேந்திரரின் செல்லப் பெயர். சிலசமயம் பிரதமருக்கும் சனதிபதிக்கும் மோதல்கள் வந்தபோதும் இருவரும் பெருந்தன்மையாக விட்டுக்கொடுத்து இணங்கியிருந்தனர். நாட்டுக்கு இரண்டு தலைவர்கள் இருத்தலாகாது எனக் கருதிய நேரு, இராசன் பாபுவை இருத்தவேண்டிய இடத்தில் இருத்துவதில் கவனமாயிருந்தார். இராசன் பாபு மாலைவேளைகளில் வெளியே உலாப்போக விரும்பியபோது, நேரு அனுமதிக்கவில்லை. சனதிபதிக்கு கௌரவ வண்டி நான்கு குதிரைகள் இழுத்தல் முதலிய பரிவாரப் பவனியில் கண்டபடி வெளியேறி மலிவாக்கக்கூடாது என்று நேரு மறுத்துவிட்டார், சனதிபதி பொதுமக்களுக்குக் கண்டபடி தரிசனம் கொடுத்தலாகாது, அவர் கொலுவிருக்கவேண்டிய பெரியவர் என்பது நேருவின் கொள்கை. ராஷ்டிர பிரதான், ராஷ்டிரபதி என்பன சனதிபதி என்பதன் இந்திமொழியாக்கம்.

## அறிந்து கொள்ளுங்கள் அறிய வேண்டியவை

### ஒருசொல்லில் விளக்குக


1. கூத்து முதலியவற்றைப் பழக்குபவர்
   அண்ணுவியார்
2. ஒரு நூலின் இறுதியிற் சேர்க்கப்படுவது
   அநுபந்தம்
3. பாதுகாப்புக்கு ஒருவரிடம் ஒப்படைப்பது
   அடைக்கலம்
4. உணவு வகைகளை ஆக்கும் இடம்
   அட்டில்
5. கட்டடங்களுக்கு ஆதாரமாக அடியில் இடப்படுவது
   அத்திவாரம்
6. மருந்துடன் சேர்த்து உண்ணப்படுவது
   அநுபானம்
7. இரவில் கூடும் சந்தை
   அல்லங்காடி

இவ்விதமாக தொடர்மொழிப் பொருளுக்கு ஒருசொல் O. L. பரீட்சையில் தாய்மொழிப் பாடத்தில் பலமுறை வருதல் வழக்கம். இங்ஙனம் முந்நூறுக்கும் அதிகமான தொடர்களை விளக்கும் ஒரு சிறு நூல் காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரால் காந்தியடிகள் நாளில் 2-10-85 இல் வெளியாகி, ஐந்து ரூபாவுக்கு விலையாகிறது. மாணக்கர் மாணக்கியர் உடனடியாக வாங்கிப் படித்து நொடி, விடுகதை போல உரையாடியும் மகிழலாம். வாங்குங்கள், படியுங்கள், பயனடையுங்கள்.

## திமிங்கிலத்தின் உணவு

மீனினங்களுள் திமிங்கிலம் சாப்பாட்டு இராமன் என்றுல், அது ஒருமுறையில் நாநூற்று இருபத்தைந்து கிலோ உணவை உண்ணும். அது தொளாயிரத்து முப்பத்தைந்து இருத்தலாகிறது.

★ இரக்கத்தை அறிவதற்கு மக்களிடையே வாழவேண்டும் ★



## உழவர் வாழ்க

அழ. வள்ளியப்பா

(குழந்தைக் கவிஞர் அவர்கள் நாம் இருபதாண்டுகளுக்குமுன் சூழல்-சுற்றாடற் கல்வி எழுதிய காலத்தில் தமது பாடல்களை எடுத்தாள்வதற்கு நன்மனதோடு உத்தரவு தந்துள்ளார்கள்.)

உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க வாழ்கவே
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே.

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் தருபவர்
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்.

பாடு பட்டு உழுபவர்
பலனுங் கண்டு தருபவர்
நாடு வளர வாழ்பவர்
நன்கு வாழ்க வாழ்கவே.

---

### நடேசபிள்ளை ...

(18-ஆம் பக்கத் தொடர்ச்சி)

'' விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார் பெறின் ''

சொல்ல வேண்டிய கருத்துக்களை ஒழுங்காக அமைத்து இனிதாகச் சொல்லக் கூடியவரைப் பெற்றால், உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்கும்.

திருக்குறள் தற்கால மக்களின் வாழ்வுக்குப் பொருந்தியிருப்பதையுங் காணலாம். இங்கிலாந்து தேசத்தின் முதலமைச்சர் வின்சென்ட் சேர்ச்சில் அவர்களின் செயலை,

'' சொலல் வல்லன் சோர்விலன் அஞ்ஞான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது''

என்னும் திருக்குறள் தெரிவிக்கிறது. அஃதாவது தான் எண்ணிய கருமத்தை நன்கு எடுத்துச் சொல்ல வல்லவனாய், சொற்சோர்வு இல்லாதவனாய், அஞ்சாதவனாய் உள்ளவனை மாறுபாட்டால் வெல்லல் யார்க்கும் அரிது என்பதாகும்.

ஜேர்மன் தேசத்து தலைவனாயிருந்த ஹிட்லரது செயலை,

'' அளமந்தாங் கொழுகான் அளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.'' என்னும் குறளால்

விளக்குவர். அஃதாவது அயல் மன்னரோடு சேர்ந்து ஒழுகாமல், தன்னுடைய வலிமையின் அளவையும் அறிந்து கொள்ளாமல், தன்வலிமையை வியந்து, அவர்களோடு பகைத்த அரசன் விரைவில் கெடுவான் என்பதாகும்.

காலம் வருமளவும் காத்திருந்து காரியத்தை நிறைவேற்றுதல் வேண்டும் என்னும் நுட்பத்தைக் கூறும் போது, ஒய்ந்திருக்க வேண்டிய நேரத்தில் கொக்கைப் போல அமைதியாக இருக்கவேண்டும். செயல்புரிய வேண்டிய காலம் வந்ததும் அதன் குத்துப் போல் தவறாது செய்துகொள்ளல் வேண்டும்.

'' கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து ''

பிறர் தூற்றுவதைப் பொறுக்கும் பண்புடையவனே உலகாள வல்லவன் என்பதை, குறை கூறுவோர் சொற்களைத் தன் செவி பொறுக்காததாகவும், பயன் கருதி அதைப் பொறுத்துக்கொள்ளும் பண்புடைய அரசனின் குடையின் கீழ் உலகம் தங்கும் என்னும் கருத்தில் விளக்குவர்.

''செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைய வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கு முலகு.''

---

## ஆங்கிலத்தில் அடுக்கு மொழி

Parade and display
Patriotism and reverence
Peaks and pinacles
Pedigree and genealogy
Penned and planned
Perception and recognition
Permanent and unchangeable
Permeate and purify
Perplexity and confusion
Personal and specific
perturbed and restless
Pestilence and famine
pettiness and prudence
Picturesque and illustrated
Pilgrim and crusader
Pillage and demolish
Pitiful and destitude
Plans and projects
Pleasant and pungent
Poetical and pastoral
Polite and elegent
Pomp and pagentry
Praise and commend
Procedence and usage
Precision and efficiency

---

★ வன்னி இலை பாபங்களைப் போக்க வல்லது ★




இலங்கை என்பதற்கு ஆற்றிடை உண்டான மேடு என்றும் பொருள். அது இலங்கியதால் இலங்கை எனப் பெயர் பெற்றிருக்கலாம். "வடிவேல் எறிந்தவன் பகை பொருது குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" என்றும், "பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக் கத்துக் குமரிக்கோடும்" என்றும் வரும் தொடர்கள் முன்னொரு சமயம் பஃறுளியாற்றிடை உண்டான மேட்டைக் குறிக்கலாம். கடல்கொண்ட லெமுரியா உலகில் முதன் முதலில் மக்கள் தோன்றி நிலவி மாண்டநிலப் பரப்பு என்பது நிரூபிக்கப்பெற்று வருகிறது.

## பெயர்கள் எத்தனை எத்தனை

இலங்கை, இலங்கா, லங்கா, இலங்காதீபம், ஈழ மண்டலம், இரத்தினதீபம், சலாபதீபம், சீயலிதீவம், சிங்களதீபம், சீலத்தீவு, செலத்தீவு, செரந்திப்பு, தம்மபண்ணை, தாமிரபண்ணை, பலாசிமுண்டு, மும்முடிச் சோழமண்டலம், சிலோன், ஸ்ரீலங்கா என்பனவும் இன்னும் பலவுமாம்.

மிகப்பழைய ஆதிகாவியமான வால்மீகராமாயணம் இரு நாடுகளின் கதையாக அமைந்துள்ளது. இந்தியாவும் இலங்கையும் மிகப்பழைய நாடுகளாகும்.

## இலங்கை

[ இப்பாட்டு 1965 ஆம் ஆண்டில் தமிழ்மலர் மூன்றும் புத்தகத்துக்காகப் பாடியது. இது இன்று உருக்குலைந்து முதற் புத்தகத்தில் ஒலிக்கிறது]

இலங்கை நாடு எம் நாடு
இதுவே எங்கள் தாய்நாடு

செந்தமிழ் சிங்களம் இருமொழியும்
சிறந்து விளங்குவ தெம்நாடு

இந்திய நாடெம் அயல்நாடு
இந்து சமுத்திரம் சூழ்நாடு

அழகு மலைகள் நிறைநாடு
ஆறுகள் பாய்வது எம்நாடு

மழைவள முள்ளது எம்நாடு
மண்வள முள்ளது எம்நாடு

வீரர்கள் வாழ்வது எம்நாடு
வெற்றிகள் கண்டது எம்நாடு

தீரர்கள் வாழ்ந்தது எம்நாடு
தியாகம் புரிந்தது எம்நாடு (இலங்கை)

### ஆராய்ச்சி நிலையங்கள்

தேயிலை – தலவாக்கொல்லை
றப்பர் – அகலவத்தை
தெங்கு – லுனுவில

### மிகப் பெரியவை

| | | | |
|---|---|---|---|
| நன்னீர் வாவி | – பல்கொட – | 2240 | ஏக்கர் |
| நீர்ப்பாசனம் | – சேனநாயக்க. | 19200 | ஏக்கர் |

### புகழ் பெற்ற மனைகள்

இராணி மாளிகை
அலரி மாளிகை
றேஸ் மீட் இடம்
ஸ்ரீமதி பாயா


## இராமராச்சியம்

இலங்கையில் இராமராச்சியமா? என்று கேட்டார் ஒருவர். அஃது எப்படிச் சாத்தியமாகும். இராமர் பிடித்த இலங்கையை விபீடணனுக்குக் கொடுத்துவிட்டாரே! அது அப்படியல்ல. இலங்கை பிற்காலத்தில் பரிபாலித்த முதலாம் இராசசிங்கன் சைவசமயத்தைத் தழுவி நன்கறிந்திருந்தான். அவன் காலத்தில் எவரும் தங்கள் வீட்டுக் கதவுகளைப் பூட்டக்கூடாது. கள்வர்களைச் சோதிப்பதற்காக அவன் மந்தைகளுக்குத் தங்க ஆபரணங்கள் அணிவித்து வயல்களிலே மேயவிடச் செய்தான். எவ்வித களவும் நடைபெறவில்லை. இது இராமராச்சியந்தானே.



மீனாட்சிப்பிள்ளை தன் மகள், மருமகள்மார் முதலானோருடன் மருவியிருத்தல்

கலைகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவானவை ★



## பேரறிஞர் ஜோர்ச் பேர்னுட்ஷோ

ஆங்கில நகைச்சுவை எழுத்தாளரும் நாடகாசிரியருமான ஷோ ஒருமுறை ஒரு பழையபுத்தகக்கடையில் ஒரு புத்தகத்தைக் கண்டு, ஆச்சரியப்பட்டார். அது தான் எழுதிய நாடகநூல் என்பதைக் கண்டு அதைஎடுத்து விரித்துப்பார்த்தபோது, முன்னர் தான் தன் நண்பர் ஒருவருக்கு அன்பளிப்புச் செய்த நூல் எனக் கண்டார். அதனை உடனடியாக விலை கொடுத்து வாங்கி, முன்னர் எழுதிய வாசகத்தின் கீழ் ''புதுக்கிய அன்பளிப்பு'' என எழுதிப் பழைய அன்பருடைய விலாசத்துக்கே அனுப்பி வைத்தார்.

### மதுரை...

(8–ஆம் பக்கத் தொடர்ச்சி)

''அன்னய்! இவரே உங்கள் மணாளன்'' என்று குறிப்பாகக் கூறினள். சிவபிரானும் அவளை நோக்கிச் சோமவார நாளில் அவளைத் திருமணம் செய்து கொள்ள வருவதாகக் கூறி வழி அனுப்பிவைத்தார்.

திருமண ஏற்பாடு பெருமளவில் நடைபெற்ற போது, தேவர்கள், பூதர்கள் பற்பல பணிகளையும் பெருமையோடும் பணிவோடும் பக்தியோடும் பண்ணியவாறு பின்தொடர மணமகன் மதுரையை அடைந்தார். காஞ்சனமாலை வரபூசை செய்து வரவேற்று உபசரித்தாள்.

சுந்தரராய சிவபிரான் கல்யாண சுந்தரராகி, உமாதேவியாருடன் இருந்தருளியதால் சோமசுந்தரராயினார். அவர் உமையுடன் கூடிய அழகர். அண்ணலும் அம்மையும் நெருங்கியிருந்த அமைவு, உலகத்துத் திருமணத் தம்பதிகளுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பது பெரியோர் கருத்து.

''பண்ணும்இன் இசையும் நீரும்
தண்மையும் பாலும் பாலின்
கண்ணும்இன் சுவையும் பூவும்
நாற்றமும் மணியும் அங்கேழ்
வண்ணமும் வேறு வேறு
வடிவுகொண் டிருந்தால் ஒத்தது
அண்ணலும் உலகம் ஈன்ற
அம்மையும் இருந்த தம்மா!''

அப்பன் அம்மையின் திருக்கரத்தை பிடித்த திருமணக்காட்சி, 'கமலப் போது பூத்ததோர் காந்தள்' போலிருந்தது என்பர் பரஞ்சோதி முனிவர். இன்னும் ''மூற்றமங் கலநாண்சாதி, முழுதுலகீன்றாள் செங்கை பற்றினன்! பற்றிலார்க்கே வீடருள் பரமயோகி!'' எனப்போற்றுவர்.

''இணர் எரித் தேவும் தானே
எரிவளர்ப் பவனும் தானே
உணவுகொள் பவனும் தானே
ஆகிய ஒருவன் வையம்
புணர்வுறு போகம் மூழ்கப்
புருடனும் பெண்ணும் ஆகி
மணவினை முடித்தான்!
அன்னான் புணர்ப்பையார் மதிக்கவல்லார்?''

### கம்பத்தடி மண்டபம்

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள கம்பத்தடி மண்டபம் ஒரு கலைப்பொக்கிஷம். அங்கேதான் என்றோ எப்பவோ இறைவிக்கும் இறைவனுக்கும் நடந்த திருமணக் காட்சிகள் கலைப்பொலிவில் இன்றும் காட்சியளிக்கின்றன. அவையாவும் தத்ரூபத்தில், இயற்கைக்கோலத்தில் அற்புதமாகச் செதுக்கப்பெற்றுள்ளன. சிவபெருமான் மாப்பிள்ளைக்கோலத்தில் கம்பீரமாக நிற்கிறார். மீனாட்சி மணப்பெண் கோலத்தில் நாணிக்கோணிப் புன்சிரிப்போடு நிற்கிறாள். திருமால் அவளைச் சிவனுக்கு தத்தம் பண்ணிக்கொடுக்கிறார். இது திருக்கல்யாணத்தின் தத்ரூபச் சித்திரம். சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தின் வரன்முறை.

### பழமொழிகளில் பூனை

தமிழர் கண்ட பழமொழிகளில் பூனை சம்பந்தமானவையும் உண்டு. சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது. பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன், புலிக்குப் பிறந்தது பூனையாகுமா! முதலான பழமொழிகள் தமிழில் உள்ளன.

ஆங்கிலத்திலும் பூனைசம்பந்தமாகப் பழமொழிகள் உள்ளன. அவற்றில் ஒருசில வருமாறு.

Curiosity killed the cat
A cat may look at a king
A cat has nine lives
Letting the cat out of the bag
A cat and dog life
Raining cats and dogs
Grenning like a cheshire cat

★ உண்மைக் கலை உலகியலுக்கு மாறுபடாதது ★



# நடேசபிள்ளை தொடக்கிவைத்த விழா

திருக்கைலாய பரம்பரைத் திருத்தருமபுரவாதீனத்தின் சென்னை மடாலய தேவாலய சமயப் பிரசார மண்டபத்தில் வேலூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தார் 28-2-1959 ஆம் நாள் திருவள்ளுவர் நினைவு விழா கொண்டாடினார்கள். அன்று சென்னை அரசபணி அதிகாரி திருநல்முருகேச முதலியார் தலைமை தாங்கினார். தருமபுரவாதீனத் திருமுறை வகுப்புப் பொறுப்பாசிரியர் ஓதுவார். பி. சுவாமிநாதன் திருக்குறட்பாக்கள் மூலம் கடவுள் வாழ்த்துப் பாடினார். அன்று சென்னை மடாதிபதியும், தருமபுரவாதீன சமயப்பிரசாரப் பெரியவரும் (இன்றைய மகாசந்நிதானமாக இருப்பவரும்) ஆகிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரசுவாமிகள் வரவேற்புரை கூறினார்கள், நடேசபிள்ளை அவர்கள் தொடக்கவுரை கூறியபின், கி. வா. ஜகந்நாதன் அவர்களும் ம. பொ. சிவஞானகிராமணி அவர்களும் பேசினார்கள். எல்லோரும் நடேசபிள்ளை அவர்களின் அறிவாற்றலையும் பெருந்தன்மையையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள்.

நடேசபிள்ளை அவர்களின் பேச்சின் சுருக்கம் தர்மபுரவாதீன வெளியீடாய ஞானசம்பந்தம் என்னும் திங்கள் ஏட்டின் மலர் பதினெட்டு இதழ் நான்கு 10-3-59 இல் வெளிவந்தது. அச்சுருக்கம் இதோ. "சென்னை நகரத்துக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது திருவள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்தவர் என்பதுதான் உலகிற்கு ஒப்பற்ற இலக்கியத்தை வழங்கிய திருவள்ளுவருக்கு, சமயஞானத்தைத் தக்க முறையில் வழங்கிச் சிறந்த சைவத் தொண்டாற்றி வரும் தருமபுர ஆதீன பிரசார நிலையத்தில் நினைவு நாள் கொண்டாடுவது பாராட்டத்தக்கது. திருக்குறள் தமிழர்களின் அருந்தனமாகும். சென்னையில் அச்சுயந்திரம் முதன் முதலில் வந்தபோது முதலில் வெளியிடப்பெற்ற நூல் திருக்குறளாகும். இது பற்றிய சுவைமிக்க வரலாறொன்றுண்டு.

அக்காலத்தில் சென்னை அரசாங்கத் தலைவராயிருந்த ஆங்கிலத் துரைமகனார் அச்சுயந்திரம் வந்தவுடன் எந்த நூலை முதலில் அச்சிடலாம் என்று வினவினார். அதற்கு அண்மையிலிருந்தவர்கள் தஞ்சை மன்னனின் அரசவைப் புலவர் கொட்டையூர், சிவக்கொழுந்து தேசிகரைக் கேட்டால் நல்ல நூலைத் தேர்ந்து சொல்லுவார் என்றனர். அப்படியே அவரை வரவழைத்து வினவினார்கள். திருக்குறளை வெளியிடலாம் என்று புலவர் கூறினார். துரைமகனார் அந்த நூலில் என்ன இருக்கிறது என்று கேட்டார். அதற்குப் புலவர் "அதில் என்ன இல்லை" என்று வினவினல் விடையிறுத்தார். அப்படியானல் இந்தக் கல்லைப்பற்றி இருக்கிறதா என்று நிலத்திற் கிடந்த ஒருகல்லைக் காட்டிக் கேட்டார். இருக்கிறது. ஒருமுறைக்கு இருமுறை கல்லைப் பற்றிக் கூறியிருக்கிறது என்று அக்குறட்பாக்களை விநயமாகக் கூறினார்.

"வீழ்நாள் படாமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்"

"பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

(அறம் செய்யத் தவறியநாள் உண்டாகாமல் ஒருவன் அதனை ஒழுங்காகச் செய்து வந்தால், அஃதொன்றே அவன் வாழும் நாளை அடைக்கும் கல்லாகும். மக்கள் பெறக் கூடிய பெருமைக்கும், மற்றைச் சிறுமைக்கும் அவரவர் செய்யும் கருமமே உரைகல்லாகும்.)

இவ்வாறு சொன்னதும் திருக்குறளின் சிறப்பையும் அதைச் சிறப்புற உணர்ந்து உரைத்த சிவக்கொழுந்து தேசிகரையும் பாராட்டிய துரைமகனார் திருக்குறளை முதலில் அச்சேற்றினார்.

தமிழரின் சிறந்த பேருக விளங்குவது திருக்குறள் வேறு எம்மொழியிலும் அம்மாதிரி நூலில்லை. வாழ்வுக்கு அடிப்படையான ஒழுக்கங்களைத் தெளிவாகவும், விளக்கமாகவும் விரிவாகவும் விளக்குவது அந்நூலேயாகும். எந்நாட்டிற்கும், எக்காலத்திற்கும், எக்குலத்தினர்க்கும் ஏற்றதாய் இலங்குவது இது. ஒழுக்கநூல்களுள் தலைசிறந்து விளங்குவதும் இதுவே.

இகபரம் என்ற இரண்டையும் கூறும் நூல் திருக்குறள் இது இல்லறம், துறவறம் என்ற இரு பெருவழியில் மக்களை அழைத்துச் சென்று மாண்புறச் செய்கிறது. மக்கள் ஒவ்வொருவரும் சிறப்பாக அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் படித்துக் கடைப்பிடிக்க வேண்டிய அற நூல் மனத்துக்குள் மாசில்லா திருத்தலே முதல் அறமென அறத்தின் இலக்கணத்தை முதலிலேயே சுருங்கச் சொல்லிவிட்டார். ஒரு கருத்தை மீண்டும் மீண்டும் நினைத்துக்கொண்டே இருந்தால், அக்கருத்தை எளிதில் நிறைவேற்றலாம் என்று அனுபவ சாத்தியத்தை அறிவித்துள்ளார். உலகம் நம் சொல் வழி நடக்க வேண்டுமானல் அதற்கு ஒரு வழி சொல்கிறார்,

(15-ஆம் பக்கம் பார்க்க)



## அற்புதக் கூத்துக்கு அபிடேகம்

உலக நடைமுறையில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றுள் முதலில் நாடகம், அடுத்து இசை, இறுதியில் இயல் எனக் கொள்வர். நாடகத்தில் நடனம் இறைவனின் பெருங்கலை. அவர் ஆடுவதால் நடராசன் எனத் திருநாமம் பெற்றுள்ளார். எங்கள் ஆடல் இறை ஆடும்போது பெருவெளியில் கிரகங்கள், நட்சத்திரங்கள், சுடர்கள் யாவும் அசைவுபெறுகின்றன. அந்த அசைவே இயக்கம். உலகம் இயங்குவதால் சுற்றிவருகிறது. ஏனைய கிரகங்களும் அப்பாலுக்கப்பாலாய் நிலவிநின்று சுற்றி வலம்வருகின்றன.

இறைவனின் ஆட்டம் பெரியவர்களுக்கு மாத்திரம் தெரியும். விண்ணுக்குமேல், வியன்பாதலக்கீழ், விரிநீர் உடுத்த மண்ணுக்கு நாபபண் நயந்து தென்தில்லை நின்ருேன் ஆடுகின்ருன். அதனுலேதான் தென்னுடு உடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனுயுள்ளான்.

இறைவனின் தனிக்கூத்தின் தத்துவ அடர்த்தி அருமையாக அமைந்துள்ளது. அவரின் உடுக்கை படைத்தல் தொழிலையும், அமைந்த திருக்கரம் காத்தல் தொழிலையும், திருக்கரமொன்றில் ஏந்திய தீ அழித்தல் தொழிலையும், ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலாய திரோபவத்தையும், எடுத்த திருவடி அருளலாய முத்தியையும் குறிப்பனவாகும். இந்த முத்தி நிச்சயத்தை உணர்ந்த அப்பர் எடுத்த பொற்பாதம் காணப்பெற்ருல் மனிதப் பிறவி இந்த மாநிலத்திலே தேவை என்பர். உடம்பு எடுத்து வினைகளைக் கழித்தால் தான் முத்தி நிச்சயம். "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்'' என்பது நாவலரவர்களின் நன்மொழி.

ஆன்மாக்களின் மாயையை உதறிக்கொட்டுதல், நெருப்பிலே கன்மமலத்தைச் சுடுதல், ஆணவத்தை அமுத்தித் தேய்த்தல், பிறவிக் கடலிலிருந்து ஆன்மாக்களை எடுத்தல், இன்பக்கடலில் திளைக்கச் செய்தல் யாருக்குமுடியும்? இறைவனுக்கு முடியும். யாருக்கு வாய்க்கும்? இறை பக்தியுள்ளவர்களுக்கு வாய்க்கும்.

### ஆடலிறைக்கு ஆறு அபிடேகங்கள் உகப்பு

சிவபெருமான் அபிடேகப் பிரியர். அபிடேகம் என்பது திருமஞ்சனம். அவருக்கும் அபிடேகத்துக்கும் உள்ள தொடர்பைத் திருமுறைகள், பத்ததிகள், ஆகமங்கள் யாவும் அருமையாகக் கூறுகின்றன. பாலினுலன்று நெய்யாற் பழத்திஞற் பயின்ருட்டி, ஆவிலஞ்சுகந்தோடு மவன் சூழல் மேவராய், தேனெடு பால்தயிர் நெய்யதாடிய நீலக்குடியரன், பாலினேடு தயிர் நறுநெய்யாடினுன், ஆடினுய் நறுநெய்யொடு பால்தயிர், பாலுநெய் முதலாமிக்கப் பகலில் ஐந்தாடுவானே. நெய்யும் பாலும் தயிரும் கொண்டு நித்தல் பூசனை செய்யலுற்ருல் எனவருந் தொடர்கள் அபிடேகத்தின் சிறப்பைக் கூறுகின்றன. அபிடேகமில்லாத பூசை பூசையாகாது.

### சிறுபொழுதும் பெரும்பொழுதும்

பாரதப் பண்பாட்டில் சிறுபொழுது, பெரும் பொழுது ஆறு வரையறுக்கப்பெற்றன. இந்த ஆறு காலங்கள் இறைவனுக்குப் பூசைகள் நடைபெறும் வரன்முறையை ஆறுகாலப் பூசை என்பர். தினமும் உதயத்தின் முன் திருவனந்தல், பின்னர் காலசந்தி, உச்சிக்காலம், சாயங்காலம், இரண்டாங்காலம், அர்த்தசாமம், என்பன ஆறுவேளைப் பூசைகளாகும்.

இவ்வாருகவமைந்த ஆறுசிறுபொழுதுகளுக்கு நேராக வமைந்தபெரும் பொழுதுக் காலகட்டங்கள் முறையேமார்கழி, மாசி, சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாதி என்பனவாம். இவற்றுள் மார்கழியில் திருவாதிரை நாளும், ஆனியில் உத்தரநாளும் மிகச் சிறந்தனவாம். இக்காலங்களில் நடேசப்பெருமானுக்கு அபிடேகம் விமரிசையாக நடைபெறுவதும் அன்று இரவு விடியும்போது இறைவனின் தரிசனம் முத்தி பயப்பதாகவும் வைத்தெண்ணப்பெறும். திருவாதிரை, உத்தரம் ஆகிய நட்சத்திரங்களின் அடிப்படையில் அபிடேகம் நடைபெறும் அமைப்பில் சித்திரையில் திருவோணநாளில் சிறப்பான அபிடேகம் நடைபெறுவது வழக்கம்.

இனி ஆறு காலத்தில் சித்திரைத் திருவோணம், ஆனி உத்தரம், மார்கழித் திருவாதிரை போக; எஞ்சிய மூன்று அபிடேகங்களும் மாசி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் நடைபெறுவன. திதியைக்கொண்டு கணித்து சதுர்த்தசி நாளில் நடைபெறுகின்றனவாம்.

இந்தவகையில் மாசியில் வரும் அபிடேகம் இருபத்து மூன்றும் தேதி நடைபெறுவதைக் கண்டு பேறுபெறுவோமாக.

''சித்திரையில் ஓணமுதல் சீரானி உத்தரமாம்,
சத்ததனு ஆதிரையும் சார்வாகும் — பத்திவளர்
மாசிஅரி கன்னி மருவு சதுர்த்தசிமன்
நீசர் அபிடேகதின மாம்''

## மலைச் சிகரங்கள்

உலகில் உள்ள மலைச் சிகரங்களுள் மிகவும் உயரமானது எவறெஸ்ற். அதற்கு அடுத்தபடியாகப் புகழ்பெற்றவை. அந்தீஸ், றொக்கீஸ், கோக்கேசஸ், அல்ப்ஸ் என்பனவாம்.

அச்சத்துக்கு மருந்து தெய்வத்தை நம்புதல்



## சூரியன்

"சூரிய ஒளிபட்டால் குப்பையும் மினுமினுக்கிறது'' என்று பெரும் அறிவாளி கதே எழுதியுள்ளார். நம்மவர் பாரம்பரியமாகத் தங்கள் பண்பாடாகப் போற்றி வளர்த்து எமக்கு விட்டுச்சென்ற வாழ்க்கை முறை அற்புதமானது. நீராடுதல், தோய்த்துலர்ந்த ஆடை தரித்தல், திருநீறு பூசுதல், இறைவனை வழிபடுதல், தியானஞ் செய்தல், திருமுறை ஓதல், இனியவை கூறுதல், விருந்து கொடுத்தல் முதலியன நல்ல காரியங்கள், நற்கருமங்கள். காலை மாலை பொழுதறிந்து சந்தியாவந்தனம் செய்பவன், எல்லாவிதமான நன்மையையும் பெறுகிறான் என்று வேதங்கள் கூறுகின்றன.

நம் உடலிலும், உணவிலும், உடையிலும், உறைவிடத்திலும், சூழலிலும் உள்ள அழுக்குகளை நீக்குபவன் சூரியபகவான். இருளை அகற்றி, ஒளியையும் சூட்டையும் மழையையும் தந்து நம்மை வாழவைப்பவனாகிய சூரிய பகவானுக்கு ஆண்டுக்கொரு பொங்கல் பொங்கி நன்றி சொன்னாற் போதாது. அவரை நாள்தோறும் வழிபடுதல் நல்லது. "ஞாயிறு போற்றுதும்'' என்று புறச் சமயத்தவரான இளங்கோவடிகள் பாடியுள்ளார்.

எவர் நம்முடைய புத்தியைத் தூண்டுகின்றாரோ, அப்படிப்பட்ட பிரகாசனை, உலகத்தை உண்டுபண்ணுகின்றவரின் மிகவுயர்ந்ததான ஒளியைத் தியானஞ் செய்கின்றோம் என்பதே காயத்திரி மந்திரத்தின் கருத்தாகும்.

சந்தியாவந்தனஞ் செய்தவர்கள் நீண்டகால வாழ்வு, அறிவு, நற்பெயர், இறையருள் ஆகிய இன்பங்களைப் பெற்றுய்தியடைந்தனர். அன்றி சித்தசுத்தி, மனச்சாந்தி, ஞானம், மோட்சம் ஆகிய சிறந்த பயனையும் பெற்றனர். "அஸௌ ஆதித்ய'' என்னும் தியானம், ஞானத்துக்கு வித்து என்றும், அது சிறந்த பயனைத்தருவது என்றும் பெரியவர்கள் கண்டுள்ளார்கள்.

சூரியனின் பிரீதிக்காக அநுட்டிக்கும் விரதங்கள் பலவாகும். அவை வளர்பிறைக் காலத்துச் சப்தமிநாள், ஆதித்ய வாரம், சங்கிராந்தி என்பனவும் பிறவுமாம். அக்கினி புராணம், ஈசான குருபத்ததி முதலிய நூல்களில் சூரிய பூசாவிதிகள், முத்திரைகள் கூறப்பட்டுள்ளன.

நீலமயில்மீது முருகப்பெருமான் எழுந்தருளி வருங்காட்சி சூரியோதயம் போல இருப்பதாக நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் பாடியுள்ளார். சூரியோதயத்தைக் கண்டு போற்றிய கம்பரின் பாடலும் அமைவாகவுள்ளது.

"எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட, உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரங்குவிப்ப வேலையென்னும்
மண்ணிமனி முழவதிர வானரங்கில்
நடம்புரிவான் இரவியான
கண்ணுதல் வானவன் கனகச்சடை விரித்தால்
எனவிரித்த கதிர்கள் எல்லாம்''

இங்ஙனம் தமிழ்ப்புலவர்கள் மரபு தவறாமல் பாடிவந்த ஞாயிற்றின் புகழை நவநீத கிருஷ்ண பாரதியாரும் விட்டுவைக்கவில்லை. அவரின் பாடல்களில் முற்பகுதி முந்திய இதழில் வெளிவந்தவற்றைத் தொடர்ந்த கவிதைகள் இவை:-

### செழுங்கதிர்ச் செல்வம்

"நின்னை விழியால் தினம்பாரா
நின்ற மனிசர் நினைப்போற்றார்
பொன்னை மணியைக் காதலித்துப்
போற்றிப் புனைந்து பொன்றுகின்றார்
அன்பைப் பெறச்சூ ரியகாந்தி
யலர்ந்தண் ணாந்துன் னணியுண்ணும்
இன்பைச் சுவைத்தற் குதயகிரி
யெனுமா மலைமே லெழுங்கதிரே!

எண்ணற் கரிய காலத்தான்
இடத்தான் மொழியாற் புலவர்களான்
எண்ணிப் புனைந்த புனைகின்ற
இனியும் புனையும் பாக்களெல்லாம்
எண்ணச் சுருக்கி யொரு சொல்லான்
எனக்கிங் கருள லுனக்கரிதோ?
எண்ணுக் ககத்தும் புறத்துமிருந்
தெல்லா முணர்த்துஞ் செழுங்கதிரே.

மண்ணாய் மறைந்து மண்காக்கும்
மழையாய் வளியாய் வளம்பெருக்கி
உண்ணா நின்றாய்; போகமெல்லாம்
உயிராய்க் கோடி யுருவமெடுத்(து)
எண்ணா நின்றவ் வுயிரையெல்லாம்
ஏற்றத் தாழ்வி லிருத்துகின்றாய்!
அண்ணா நீயார்? அவையாரென்(று)
அடியேற் கருளாய் செழுங்கதிரே!



# சிறுவர் இலக்கணம்

## ஒரே கருத்துள்ள சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | வாக்கு | — | சொல் |
| 2 | பீடு | — | பெருமை |
| 3 | காதல் | — | அன்பு |
| 4 | மிடறு | — | கழுத்து |
| 5 | வந்தனை | — | வணக்கம் |
| 6 | சீர் | — | பெருமை |
| 7 | அணி | — | அழகு |
| 8 | குழந்தை | — | குழவி |
| 9 | இடர் | — | துன்பம் |
| 10 | கவி | — | பாட்டு |

## எதிரான கருத்துள்ளவை

| | | | |
|---|---|---|---|
| 1 | முதல் | — | கடைசி |
| 2 | ஆகும் | — | ஆகாது |
| 3 | தாழ்ச்சி | — | உயர்ச்சி |
| 4 | உடையது | — | இல்லாதது |
| 5 | பற்பல | — | சிற்சில |
| 6 | வேண்டும் | — | வேண்டாம் |
| 7 | பெருக | — | சுருங்க |
| 8 | மிகுந்த | — | குறைந்த |
| 9 | சுத்தம் | — | அசுத்தம் |
| 10 | அதிகாரி | — | வேலையாள் |

## அடுக்குத் தொடர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | குடுகுடு | 6 | பளபள |
| 2 | கடகட | 7 | கணகண |
| 3 | கலகல | 8 | வழவழ |
| 4 | பரபர | 9 | கிடுகிடு |
| 5 | தகதக | 10 | சலசல |

## சேர்த்து எழுதுதல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | எள் | + | நெய் | = | எண்ணெய் |
| 2 | எண் | + | தோள் | = | எண்டோள் |
| 3 | நீடு | + | அவை | = | நீடவை |
| 4 | செம்மை | + | அடி | = | சேவடி |
| 5 | குமர | + | ஈசன் | = | குமரேசன் |
| 6 | சிறுமை | + | அடி | = | சீறடி |
| 7 | சிறுமை | + | ஆறு | = | சிற்ருறு |
| 8 | வேர் | + | ஊன்றி | = | வேரூன்றி |
| 9 | உழுது | + | உண்டு | = | உழுதுண்டு |
| 10 | மாடு | + | சாணி | = | மாட்டுச்சாணி |

## ஆண்பால்: பெண்பால்

| | | | |
|---|---|---|---|
| 1 | அப்பன் | — | அம்மை |
| 2 | அரசன் | — | அரசி |
| 3 | ஆசிரியன் | — | ஆசிரியை |
| 4 | இடையன் | — | இடைச்சி |
| 5 | ஈசன் | — | ஈசுவரி |
| 6 | உழவன் | — | உழத்தி |
| 7 | ஒருவன் | — | ஒருத்தி |
| 8 | குணவான் | — | குணவதி |
| 9 | குணவான் | — | குணத்தி |
| 19 | குமரன் | — | குமரி |

## பிழையும் சரியும்

| | | | |
|---|---|---|---|
| 1 | சக்கரை | — | சர்க்கரை |
| 2 | புக்கை | — | புற்கை |
| 3 | ஆக்கள் | — | ஆட்கள் |
| 4 | இளனி | — | இளநீர் |
| 5 | இறச்சி | — | இறைச்சி |
| 6 | உடமை | — | உடைமை |
| 7 | எண்ணை | — | எண்ணெய் |
| 9 | ஏப்பை | — | அகப்பை |
| 10 | ஒண்டு | — | ஒன்று |

முற்ருெடர்:

## செந்தமிழ் வழக்கில்

இரண்டும் சரி

சிந்தல்

சிதரல் — சிதறல்

கரம்பன் நிலம்

தரிசு — தறிசு

ஒருகல்


கருப்பு — கறுப்பு

தருணம்

தருவாய் — தறுவாய்

(7-ஆம் பக்கம் பார்க்க)

★ தெய்வ காரியங்களுக்குப் பக்தி வேண்டும் ★



## ஆசிரியர்பகுதி

சென்றமாதச் செய்தி இதழில் வகுப்பில் ஒழுங்கான நிலையை வருவிப்பதைப்பற்றி அறிந்தோம்.)

### B பாடத்தின் ஆரம்பத்தில்

1. பாடத்தை நல்லமுறையில் ஆரம்பிக்கவும். வகுப்பில் சப்தம் சந்தடி நிலவினுல் அவை ஒயும் வரை பொறுக்கவும். பொறுமை ஆசிரியருக்குத் தலைசிறந்த அணியும் உதவியுமாம்,
2. தயவுசெய்து படிப்பித்தற்கு உதவியான சகல உபகரணங்களையும் உடன்கொண்டுவரவும்.
3. பிள்ளைகள் எல்லோரும் தமக்குத் தேவையானவற்றை தயாராக வைத்திருப்பதைக் கவனிக்கவும்.
4. கரும்பலகையை வசதியான இடத்தில் வைக்கவும். கரும்பலகை சுவரிலமைந்தால் அதற்குத்தக்கதாக வகுப்பை ஒழுங்குசெய்யவும்.
5. கரும்பலகையில் தாங்கள் எழுதுவனவற்றை மீளப் பார்த்துப் பிழைகளை தவிர்த்துக்கொள்ளவும்.
6. வகுப்பறையில் தாங்கள் இருக்கும்போதும் நிற்கும் போதும் எல்லாப் பிள்ளைகளையும் தாங்கள் பார்க்கக் கூடியதாகவும், எல்லாப்பிள்ளைகளும் தங்களைப் பார்க்கக்கூடியதாகவும், தாங்கள் இடம்கொள்ளவும். பிள்ளைகளுக்கு மிக நெருக்கமாக இடங்கொள்ளாது கவனிக்கவும்.
7. முதல்நாளைய பாடத்தைச் சுருக்கமாக மீட்டுக்கொள்ளவும்.
8. அன்றைய, எடுத்துக்கொண்ட பாடத்தின் நோக்கத்தைக் கூறிவிளக்குவதை மறந்துவிடாதீர்கள், செயல்கள், யத்தனங்கள் யாவும் நோக்கமுள்ளவை என்பது மனோதத்துவ உண்மை.
9. தாங்கள் எடுத்துக்கொண்ட பாடத்தை ஓர் அப்பியாச முறையில் அல்லது செயல்திட்ட முறையில் அமைப்பதற்கு ஆவன செய்யுங்கள்.
10. பிள்ளைகள் நன்ருக அறிந்தனவற்றை, முன்னறிவுள்ள விடயங்களை ஒருபோதும் படிப்பித்து வேலைமினக் கேடு செய்யாதீர்கள். யாராவது மாணக்கன் ஒருவனுக்கு முன்னறிவு இருப்பக்கண்டால், அவனை ஆதரவோடு அழைத்துப் பாடத்தைச் சொல்லுமாறு பணித்து முதுகில் தட்டிவிடுங்கள்.

### To Teachers

"Some carve on the white gleaming marble
the things that in fancy they see.

Some fix them with canvas and colour
and bring them to you and me.

Some guide with "Thou Shalt" "Thou Shalt not',
and seek to inspire with song.

You build with a subtler material
the traits that shall make the race strong.

When the statues have withered and fallen
when the paint on the canvas is dead

When precepts of priests are forgotten
and the songs and the singer are sped.

You shall live in the lives you have moulded
and lead with the corouge of this ten."

---

## பழமொழிகள்

### உவமானம்பற்றி வந்தவை

1. அறுத்தவள் ஆண்பிள்ளை பெற்ருற்போல
2. ஆற்றிலே கரைத்த புளிபோல
3. ஆட்டுக்கிடையில் ஒநாய் புகுந்தாற்போல
4. இடியோசை கேட்ட நாகம்போல
5. இஞ்சி தின்ற குரங்குபோல
6. இருதலைக் கொள்ளி எறும்புபோல
7. இலவு காத்த கிளிபோல
8. உள்ளங்கை நெல்லிக்கனிபோல
9. ஊமையன் கண்ட கனுப்போல
10. எடுப்பார் கைப்பிள்ளைபோல
11. எள்ளுக்குள் எண்ணெய்போல
12. காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தாற்போல
13. காய்ந்தமாடு கம்பில் விழுந்ததுபோல
14. கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டாற்போல
15. குடத்துள் ஏற்றிய விளக்குப்போல
16. கும்பிடப் போனதெய்வம் குறுக்கே வந்தாற்போல
17. குன்றின்மேல் வைத்த தீபம்போல
18. கூத்திலே கோமாளி வந்தாற்போல
19. சூரியனைக் கண்ட பனிபோல
20. தாமரை இலையில் தண்ணீர்போல
21. தாய்முகம் பார்க்கும் சேய்போல
22. திருடனைத் தேள் கொட்டினுற்போல்
23. திறந்த வீட்டில் நாய் நுழைந்தாற்போல
24. நகமும் சதையும்போல
25. பசிக்குப் பனம்பழத்தைத் தின்ருற்போல

---

# கடவுள் வணக்கம்

சிந்தனை உனக்குத் தந்தேன்
திருவருள் எனக்குத் தந்தாய்
வந்தனை உனக்குத் தந்தேன்
மலரடி எனக்குத் தந்தாய்
பைந்துணர் உனக்குத் தந்தேன்
பரகதி எனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்த நாதா
கருவையில் வாழுந் தேவே.

— அதிவீரராம பாண்டியன்

கதிரவன் கிரணக் கையால்
கடவுளைத் தொழுவான், புட்கள்
சுதியொடும் ஆடிப் பாடி
துதிசெயும், தருக்க ளெல்லாம்
பொதியலர் தூவிப் போற்றும்
பூதம் தந்தொழில் செய்தேத்தும்
அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும்
அகமேநீ வாழ்த்தா தென்னே!

— மயூரம் வேதநாயகம்பிள்ளை



## 'அஸ்தீகர்'

''அஸ்தீகர் அஸ்தீகர்'' என்றோ, ''அஸ்தீகர் ஆணை'' என்றோ உச்சரித்தால் பாம்பின் பயம்உண்டாகாது என்பர். ஜரத்தாரு என்னும் மகரிஷி, ஜரத்தாரி என்னும் பெண்ணை மணந்து பெற்ற மைந்தன் அஸ்தீகர்.

கடும்தபசியான அஸ்திகருக்கு அவர்காலத்தில் பெரு மதிப்பு நிலவியது. ஒரு சமயம் ஜனமே ஜயர் என்பவர் கடுமையான சர்ப்பயாகஞ் செய்தபோது உலகிலுள்ள பாம்பினங்களை எல்லாம் அக்கினி குண்டத்தில் வந்து விழுந்து சாம்பராகும் வண்ணம் மந்திர உச்சாடனம் நடைபெற்றது.

தட்சன் என்னும் பெரிய பாம்பு, கட்டுக்கடங்காமல் இந்திரனுடைய கட்டிலின் காலைச்சுற்றிக் கொண்டு தப்பி நின்றது. யாகஞ் செய்தவர்கள் உடனடியாகத் தட்சன் கட்டிலோடு அக்கினி குண்டத்தில் வந்து விழுமாறு மேலும் மந்திரங்களை உச்சரித்தனர்.

இதனை உணர்ந்த அஸ்தீகர் உடனடியாக யாகம் நடைபெற்ற இடஞ்சென்று சமாதானம் பேசித் தட்சனை இறவாமற் காப்பாற்றினார். அதனால் தட்சன் அவருக்குக் கொடுத்த வாக்குறுதியின் வண்ணம் அவர் பெயரை நினைத்தால், பாம்பின் பயம் உண்டாகாது என்னும் நம்பிக்கை நிலவுகிறது. அஸ்தீகர் தன் தாய்க்குப் பாதுகாவலராகக் கதியாக இருந்தமையால் அஸ்தீகர் இன்னும் பெயர் உண்டானது என்ப.

---

மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசன்
ஸ்ரீமத் ஜீவனானந்த சுவாமிகள் அனுப்பியருளிய

## அநுதாபத் தந்திச் செய்தி

அன்னையாரின் மறைவுச்செய்தி கிடைக்கப்பெற்றோம். அன்னையாரின் ஆத்மா பரம்பொருளின் திருவடிகளின் கீழ் நித்தியமான சாந்தி அடையட்டும். தங்களுக்கு ஏற்பட்டுள்ள ஈடு செய்யமுடியாத இந்தப் பேரிழப்பில் நாங்களும் பங்குபெறுகின்றோம். அன்னையாரின் மறைவால் ஏற்பட்டுள்ள மனச்சஞ்சலத்தை தாங்கும் சக்தியை பரம்பொருள் தங்கள் அனைவருக்கும் தந்தருள்வாராக. எமது ஆழ்ந்த அநுதாபத்தை தாங்கள் ஏற்று தங்கள் குடும்பத்தவர் ஒவ்வொருவருக்கும் தெரிவியுங்கள்.

---

உங்களுக்குத்.....
(24ம் பக்கத் தொடர்ச்சி)

### விடைகள்

1 கிரேக்கர் – திரோயர் 20 ஆண்டு யுத்தம்
2 லேடி யேன் கிறே. 3 மேரி அன் இவன்ஸ்.
4 பொடிசியா. 5 யேம்ஸ். 6 விலியம்காக்ஸ்ரன்.
7 சைமன் டீ மொன்போட் 8 நைல் 9 ரோக்கியோ
10 றீ. 11 எறிக்-ஒன்ராறியோ. 12 ராஸ்மன்
13 போப் ஆண்டவர். 14 விசூவியஸ். 15 கோசிக்கா
16 சென். ஹெலனா. 17 றஸ்யா 18 கோஹினூர்.
19 இரும்பு. 20 வெள்ளி.

---

★ உண்மையான உறவினன் பக்கத்திலேயே நிற்பான் ★

ஒரே செலவில் தமக்கும் பிறர்க்கும் நயம்வர
வாய்ப்பான வழியை நாடுதல் உத்தமமல்லவா?

நாடு நலம்பெற, நாம் நற்சேவை செய்ய
எமது உற்பத்திப் பொருள்களுக்கு உங்கள்
அமோக ஆதரவு பெருகட்டும்.




மில்க்வைற் தயாரிப்புகள் யாவும் தற்பொழுது
கூடிய நிறையுடன் புதிய முறையில்
மெருகூட்டப்பட்டு எங்கும் விற்பனையாகின்றன.

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளைச்
சேகரித்துக் கொடுத்து பெறுமதிவாய்ந்த
பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23233

# உங்களுக்குத் தெரியுமா?

## எது? ……… யாவர்?

(விடைகள் வேறிடத்தில்)

1 தேவாசுரயுத்தத்திலும் பார்க்க நீண்டகாலயுத்தம்.
2 ஒன்பது நாள்கள் அரசாண்ட ஆங்கில இராணி.
3 ஜோர்ச் எலியட் என்னும் புனைபெயர்க்காரி.
4 உரோமரை எதிர்த்த பிரித்தானியப்பெண்.
5 இங்கிலாந்தையும் ஸ்கொத்துலாந்தையும் ஆண்ட அரசன்.
6 இங்கிலாந்தில் அச்சகத்தை முதலில் நிறுவியவர்.
7 இங்கிலாந்தில் பாராளுமன்றம் அமையக் காரணமாய பிரான்சியர்.
8 அஸ்வான் என்னும் அணை அமைந்த ஆறு.
9 உலகில் குடிசனம் அதிகமுள்ள நகரம்.
10 தென் அமெரிக்காவின் தீப்பறவை.
11 நாயகரா நீர்வீழ்ச்சிக்கான வாவிகள்.
12 நியுசிலாந்து நாட்டைக் கண்ட ஒல்லாந்தன்.
13 வெற்றிக்கன் மாளிகையில் வாழ்கின்ற பெரியார்.
14 பழைய பொம்பி நகரை அழித்த எரிமலை.
15 நெப்போலியன் பிறந்த தீவு
16 நெப்பொலியன் இறந்த தீவு.
17 மிகப்பெரிய நிலப்பரப்புள்ள வல்லரசு
18 மிகப்பெரிய பழைய வைரக்கல்லின் பெயர்.
19 கரும்பொன் என வழங்கும் உலோகம்.
20 வெண்பொன் என வழங்கும் உலோகம்.

# ஒரு வைரத்தின் வரலாறு

நிலக்கரிக்கும், வைரத்துக்கும் விஞ்ஞான ரீதியில் வித்தியாசம் இல்லையாயினும் விலையளவில் பெருமளவு பேதம் உண்டு. வைரம் விலையுயர்ந்த பொருள். வைரங்களுள் மலையின் ஒளி எனப் பெயர் பெற்ற கோஹினூர் கல் பிரித்தானிய அரசியின் முடியை அலங்கரிக்கிறது. இதுமுன்னர் விக்ரோறியா மகாராணியாரின் முடியை அலங்கரித்தது.

பிரித்தானியரின் கிழக்கிந்திய வர்த்தகசங்கத்தார் இந்தியாவில் சுவீகரித்த வைரத்தின் வரலாறு 4000 ஆண்டுப் பழைமையானது. அது ஒரு காலத்தில் டெல்கி நகரில் மயிலாசன மன்னரின் முடியிலும் இருந்தது. அதனைப் பாரசிக மன்னன் ஒருவன் கையாடிப் போனதும் இது அங்கானிஸ்தானம் வரை சென்று இந்தியாவுக்கு மீண்டதும், பின்னர் பிரித்தானியா சென்றதும் வரலாறு. இது முதலில் 800 கறட் நிறையுள்ளதாயிருந்தது. காலந்தோறும் நிறை குறைக்கப்பட்டுச் சிறிதாயிற்று என்பர்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப் புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள் கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-2-86.